# மாவை ஆலயத்திலிருந்து பொலிசாரை அகற்ற


Registered as a News Paper in Ceylon    விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 159
தேசிய தினசரி

யாழ்ப்பாணம்  ஆடி 4  ஜமா. அவ் 15  திங்கட்கிழமை  [20-7-70]



**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 8-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும். தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.


## நடவடிக்கை

### பரிபாலகர்களுக்கு உதவி அமைச்சர் உறுதி

மாவிட்டபுரம், ஞாயிறு யாழ்ப்பாணப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள கலாச்சார விவகார உதவி அமைச்சர் திரு. சோமவீர சந்திரசிறி இன்று மாவிட்டபுரம் கந்தன் ஆலயத்துக்கு சென்று மாவை பரிபாலகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்பொழுது அகில இலங்கை சைவசித்தாந்தகழகத்தலைவர் பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள், ஆகம விதிகளையும் கோயில் அமைப்பு முறைகளையும் எடுத்துச்சொல்லி, அவரவர் தமக்குரிய இடங்களில் நின்று வணங்கவேண்டியதன் அவசியத்தை அமைச்சருக்கு விளக்கி கூறினர்.

இப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட மாவை ஆலய நிர்வாகி திரு: ஸி. சுந்தரலிங்கம், பொலிசாரின் உதவியுடன் ஆகம விதிகளுக்குப் புறம்பாக 2ம்வீதிக்

(4ம் பக்கம் பார்க்க)

## புதிய அரசியல் திட்டம்

# சகல குடிமக்களதும் அடிப்படை உரிமைகளுக்கு பாதுகாப்பு கிடைக்கும்

## 'அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்'

### அரசியல் நிர்ணயசபை மீதான விவாதத்தில் வட்டு எம். பி

கொழும்பு, ஞாயிறு ஒளிமயமான எதிர்காலத்தை இந்த நாட்டு மக்கள எதிர்நோக்க ஆரம்பித்துள்ளார்கள், தமிழ்காங்கிரஸ் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தை சட்டரீதியாகவோ, அரசியல் அமைப்பு ரீதியாகவோ நோக்கவில்லை. அரசியல் ரீதியாகவே நோக்குகிறது. இந்த அரசியல் திட்டம் உருவாகுவதற்குகடைப்பிடிக்கும்வழிமுறைகள்பற்றி நுணுக்கமாக நாம் ஆராயவில்லை. அது அவசியமுமில்லை, இதுபோன்ற சந்தர்ப்பங்களில் நாங்கள் அழைக்கப்பட்டிருப்பதன் நோக்கமே வழி

அரசியல் நிர்ணயசபையாக மாற்றி அமைப்பதுசம்பந்தமான பிரேரணைமீதான விவாதத்தில் திரு ஆ- தியாகராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இந்நாட்டு சகல இன மக்களின் அபிலாஷைகளுக்கும் மதிப்புக் கொடுத்து ஐக்கியமான சுதந்திரமான ஒரு சோஷலிச அமைப்பை ஏற்படுத்தப் போவதாக பிரதமர் பேச்சிலும் பிரேரணையிலும் வாக்குறுதியை அளித்துள்ளது நம்பிக்கையை அளிக்கிறது,

புதிய அரசியலமைப்பில்

## 'நவரங்கஹல' கூட்டத்தில் பிரதமர் வாக்குறுதி

### விடுதலை வீரர்களுக்கு டாக்டர் பெரேரா அஞ்சலி

கோட்டை, ஞாயிறு

**இலங்கையைப் பூரண சுதந்திரமுள்ள மக்கள் குடியரசாகப் பிரகடனப்படுத்துவதற்கான புதிய அரசியல்திட்டம் தேசிய ஒருமைப்பாட்டைப் பலப்படுத்துவதாக இருக்கும் என்று பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்று 'நவரங்கஹல'வில் நிகழ்த்திய உரையின்போது குறிப்பிட்டார்.**

இந்த நாட்டில் சிங்களவர்கள், தமிழர், முஸ்லிம்கள், மலாயர், பறங்கியர் போன்ற பல்வேறு தேசிய இனங்கள் வாழுகின்றனர் நாம் அனைவரும் ஒரே நாட்டின் ஒரே இனமாக வாழந்திருக்கிறோம் என்றுமே இவ்வாறு நாம் ஒரே இனமாக வாழ்வதற்கு வழிசெய்தல்வேண்டும் என்று பிரதம மந்திரி குறிப்பிட்டார்.

மக்கள் பிரதிநிதிகள் சபை அரசியல் நிர்ணய சபையாக இயங்கும் முகமாக இம்மாதம் 29-ம் திகதி கூடவேண்டும் என்ற பிரேரணையை பிரதம மந்திரி முன்மொழிந்து உரைநிகழ்த்தினர்.



பிரதம மந்திரியின் இந்தப் பிரேரணையை டாக்டர் என். எம். பெரேரா வழிமொழிந்து உரைநிகழ்த்துகையில் இந்த நாட்டின் சுதந்திரத்துக்கு தியாகங்கள் செய்த வீரப்புதல்வர்களின் பெயர்களைக் குறிப்பிட்டார். சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன் அருணாசலம் போன்ற தமிழ் பெருமக்களையும் டாக்டர்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இன்று இரு கல்லூரிகளுக்கு விடுமுறை

யாழ்ப்பாணம், திங்கள் யாழ். மத்திய கல்லூரி முன்னாள் அதிபரும்இலங்கை மெதடிஸ்த் சபைத்தலைவருமான டாக்டர் டி. ரி. நைல்ஸின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கு முகமாக இன்று யாழ். மத்தியகல்லூரிக்கும் வேம்படி மகளிர் கல்லூரிக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

— —

கோட்டை, ஞாயிறு வெளியூர்களிலிருந்து பெறப்படும் சிறுவர்களுக்கு அறிவூட்டக்கூடிய படங்களைத் திரையிட கொழும்பு கலை அரங்கினர் திட்டமிட்டுள்ளனர்.

டம் உருவாகுவதற்குகடைப் பிடிக்கும்வழிமுறைகள்பற்றி நுணுக்கமாக நாம் ஆராய வில்லை. அது அவசியமுமில்லை, இதுபோன்ற சந்தர்ப்பங்களில் நாங்கள் அழைக்கப்பட்டிருப்பதன் நோக்கமே வழிகாட்டியாக அமையவேண்டுமென்பதையே விரும்புகிறோம்:'

இவ்வாறு வட்டுக்கோட்டை எம் பி திரு ஆ தியாகராசா இன்று ஆட்சிமன்றத்தில் நடந்த அரசியல் நிர்ணயசபைபிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

கொழும்பு நவரங்கஹல மண்டபத்தில் நடந்த அரசியல் நிர்ணயசபை அங்குரார்ப்பணத்தை அடுத்து ஆட்சிமன்றத்தில் மாலை 3 மணியளவில் அரசியல் நிர்ணயசபை அங்கத்தவர்கள் கூடினர்கள்.

படுத்தப் போவதாக பிரதமர் பேச்சிலும் பிரேரணையிலும் வாக்குறுதியை அளித்துள்ளது நம்பிக்கையை அளிக்கிறது.

புதிய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள்பாது காக்கப்பட வேண்டும்-

கல்வி நிர்வாகம் நீதிபரிபாலனத்துறைகளில் சிங்களவர்களுக்கு சிங்களம் எப்படியோ அதுபோன்றே தமிழர்களுக்கும் தமிழ்மொழி இருக்க வேண்டும்'

— —

## இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் சுவாமி சிவானந்தர் ஆராதனை வாரத்தில் இரண்டாம் நாள் இன்றுவிசேஷ பிரார்த்தனை நடைபெறும்,

## 'கட்சி அரசியலினால் நாட்டுக்குப் பெரும் கெடுதி'

—தஹா

'கட்சி அரசியலும், மந்திரிசபை ஆட்சிமுறையும் இந்த நாட்டுக்கு நன்மையைவிடப் பெருத்த கெடுதிகளையே ஏற்படுத்தியுள்ளது' என்று முன்னாள் அமைச்சரும், காலி எம் பி யுமான டாக்டர் டபிள்யு தஹநாயகா இந்த விவாதத்தில்கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் 'புதிய அரசியலமைப்பில்பிரித்தானிய ஆட்சி முற்ருக மாற்றியமைக்கப்பட்டு புதிய ஆட்சிமுறை ஏற்பட வேண்டும். காமன்வெல்த் நாடுகள் தொடர்புகள் முற்ருக துண்டிக்கப்படவேண்டும்' என்ருர்.



## உதவி அமைச்சரின் காரின் கீழ் வெடிவிபத்து

நல்லூர், திங்கள்

உரும்பராயில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் கலந்து கொள்ளச் சென்ற உதவிக் கலாசாரவிவகார அமைச்சரின் கார் சக்கரத்தின் கீழ் வெடியொன்று வைக்கப்பட்ட தாகவும் இதனால் அந்தக்காரின் ஒரு பகுதிசிறிது சேதமடைந்ததாகவும் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது இச்சம்பவம் சம்பந்தமாக ஒருவர் சிறிது காயமடைந்ததாகவும் மற்றும் இருவர் சந்தேகத்தின் மீதுகைதுசெய்யப்பட்ட தாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

# "நீதிமன்ற மொழிபற்றி தமிழருக்கு அச்சம்தேவையில்லை"

## அரசுபாகுபாடுகாட்டாதுஎன்கிருர் வி. பொ.

மாவிட்டபுரம், ஞாயிறு

'கிராமங்களில் வாழும் சகல விவசாய பாமர மக்களும் சாதி, இன மத வேறுபாடின்றி ஒற்றுமையாக வாழ ஐக்கிய முன்னனி அரசாங்கம் உதவியாக இருக்கும்' என தெல்லிப்பளை அம்பனையில் ஐக்கிய முன்னணி கிளை ஒன்றை திறந்துவைத்துப் பேசுகையில் வடபிரதேசக் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் வி. பொன்னம்பலம் கூறினர்.

திரு. தம்பு செல்வரத்தினம் தலைமையில் நடந்த கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

நீதிமன்ற மொழிசம்பந்தமாக மக்கள் அரசாங்கம் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் பற்றி இப்போது எதுவும் சொல்ல முடியாது. அரசாங்கம் ஒரு இன மக்களுக்குக் கஷ்டம் விளைவிக்கக் கூடியதாக நீதிமன்ற மொழியை அமுல்நடத்தமாட்டாது சகல மக்களும் கஷ்டமின்றி வாழ வழிவகுப் போம். நீதிமன்ற மொழிசிங்களம் என்று கூறி எதிர்ப்போராட்டம் நடத்த சிலர் முனைகிருர்கள். இதுதேவையற்ற போராட்டமாகும்.

தமிழ்மக்களுடன் ஒத்துழைத்து சகல பிரச்னைகளையும் தீர்க்க சிங்கள மக்கள் தயாராகியுள்ளனர் இந்நிலையில் தமிழ் மக்களில் சிலர் செய்யும் விஷமத்தனமான செய்கையால் சிங்கள மக்களின் உதவியின்றிப் பிரச்னைகள் தீர்க்கமுடியாமல் தொடரவேண்டிய நிலை ஏற்படும்.

திருவாளர்கள் கே. இராசவன்னியர், எஸ் சிவலிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர்.

— —

## பதவியை இழந்தார்

பதுளை, ஞாயிறு

நான்குமுறை தொடர்ந்து கிராமசபைக் கூட்டத்துக்கு செல்லாததினுல் பட்டிப்பளை கிராமசபை உறுப்பினர் திரு. பெருமாள் இராமசாமி தமது அங்கத்தவர் பதவியை இழந்தார்.

தம மந்திரி முன்மொழிந்து உரைநிகழ்த்தினர்.

பிரதம மந்திரியின் இந்தப் பிரேரணையை டாக்டர் என். எம். பெரேரா வழிமொழிந்து உரைநிகழ்த்துகையில் இந்த நாட்டின் சுதந்திரத்துக்கு தியாகங்கள் செய்த வீரப்புருஷர்களின் பெயர்களைக் குறிப்பிட்டார். சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன் அருணுசலம் போன்ற தமிழ் பெருமக்களையும் டாக்டர் பெரேரா குறிப்பிட்டார்.

புதிய குடியரசுக்கான அரசியல் திட்டமொன்றை வரைவதற்காக மக்கள் பிரதிநிதிகள் சபை அரசியல் நிர்ணய சபையாக இயங்கவேண்டும் என தீர்மானிப்பதற்காக 'நவரங்கஹல'வில் இன்று காலை நடைபெற்ற வைபவ நிகழ்ச்சிகள் யாவும் சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலுமே இடம்பெற்றன.

பிரேரணைகள் முன்மொழிதலும் வழிமொழிதலும் சிங்களத்தில் இடம்பெற்றவுடன் அதனைத் தமிழிலும் சொல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன..

பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சிங்களத்தில் நிகழ்த்திய உரை உடனடியாகவே தமிழில் தபால் தந்தித்தொடர்பு அமைச்சர் திரு. குமாரசூரியரால் மொழிபெயர்த்தளிக்கப்பட்டது.

# நாட்டின் வரலாற்றில் புதிய அத்தியாயம்

இலங்கையின் வரலாற்றிலேயே புதிய அத்தியாயம் ஒன்றைத் தோற்றுவிப்பதற்காக சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக கொழும்பு ரோயல் கல்லூரியிலுள்ள 'நவரங்கஹல' மண்டபத்தில் இன்று காலை மக்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களை வந்து கலந்துகொள்வதற்காகப் பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயக்க அழைப்பு விடுத்திருந்தார். இந்த அழைப்பை ஏற்று ஆட்சிமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வந்திருந்தனர். கூட்ட நிகழ்ச்சிகள் சரியாக 11 மணிக்கு ஆரம்பமாகின, கட்டிடம்பாரம்பரியமுறைப்படி தென்னங்குருத்துக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மண்டபத்தினுள்ளே பெரிய சிங்கக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. மத்தியில் பெரிய புத்தர்சிலையொன்று வைக்கப்பட்டிருந்தது. மங்கள விளக்குகளும் கொளுத்தப்பட்டிருந்தன.

பிரதமமந்திரி வருவதற்கு முன்னரே அமைச்சர்களும், எம். பி.க்களும், செனட்டர்களும், பிரமுகர்களும், சமயத் தலைவர்களும் தத்தம் ஆசனங்களில் வந்து அமர்ந்துகொண்டார்கள். முன் வரிசைகளில் கட்சிகளின் தலைவர்கள் மந்திரிகள் முதலியோர் காணப்பட்டனர். திரு ஜி ஜி பொன்னம்பலம், திரு எஸ் ஜேவி செல்வநாயகம் மற்றும் யு என் பி தலைவர் திரு ஜே ஆர் ஜயவர்த்தன, திரு டட்லி சேனநாயக்கா ஆகியவர்கள் காணப்பட்டனர்.

பிரதம மந்திரி பதினெரு மணிக்கு சற்று முன்பதாக மண்டபத்தின் வெளியே வந்து சேர்ந்தார். அவரை அரசியல் சட்ட விவகார



அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா உளநாட்டமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா ஆகியவர்கள் வணக்கம் செலுத்தி அழைத்து வந்தார்கள் பிரதம மந்திரி மண்டபத்தினுள்ளே சென்றதும் கூட்டத்தினர் எழுந்து நின்றுவரவேற்ருர்கள் அவர்களுக்கு கரங்கூப்பிவணக்கம் தெரிவித்துக்கொண்டு தமது ஆசனத்திற்கு அவர் சென்ருர். தேசியகீதம் இசைக்கப்பட்டது. 'மகுள்பெர' முழங்கியது பிரதமர் தம் ஆசனத்தில் அமர்ந்தார்.

பௌத்த மகளிர் கல்லூரி மாணவிகள் 'ஜயமங்கள காதா' பாடினர்கள் அதன் பின் கூட்டத்தின் நோக்கம் பற்றிய தீர்மானத்தை வாசிக்கும்படி பிரதம மந்திரி அரசியல்சட்ட விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வாவைக் கேட்டுக் கொண்டார் டாக்டர்கொல்வின் ஆர் டி சில்வா சிங்களத்தில் வாசித்த பிரகடனத்தை திரு குமாரசூரியர் தமிழில் வாசித்தார்.

### தலைவர் தெரிவு

அரசியல் திட்டத்தை உருவாக்குவதற்கான அரசியல் நிர்ணயசபையின் தலைவராக திரு. ஸ்டான்லி திலக்கரத்தினவின் பெயரை பிரதம மந்திரி முன்மொழிந்தார், இதனை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்தன வழிமொழிந்தார். திரு. திலகரத்தின வராதசமயங்களில் தலைமை வகிப்பதற்காக திரு. அப்துல்காதரின் பெயரை திரு. பீட்டர்கெனமன் முன்மொழிந்தார். இதனை திரு. பி. பி. ஜி. கலுகல்லை வழிமொழிந்தார். சபையின் காரியதரிசியாக செயலாற்றுவதற்கு திரு. வால்டர் ஜெயவர்தனவின் பெயரை திரு. டி. பி. இலங்கரத்ன முன்மொழிந்தார், இதனை திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாநாயக்கா வழிமொழிந்தார்

இதன்பின் கூட்டம் இத்துடன் கலைந்து மாலை மூன்று மணிக்கு மக்கள் பிரதிநிதிகள் சபை மண்டபத்தில் கூடவேண்டும் என்ற பிரேரணையை திரு. மைத்திரிபாலசேனநாயக்கா முன்மொழிந்தார். இதனை திரு. ஹெக்டர் கொப்பகடுவ வழிமொழிந்தார்.



வெளியூர்களிலிருந்து பெறப்படும் சிறுவர்களுக்கு அறிவூட்டக்கூடிய படங்களைத் திரையிட கொழும்பு கலை அரங்கினர் திட்டமிட்டுள்ளனர்.

இதுசம்பந்தப்பட்ட முப்பத்திரண்டு படங்கள் கலை அரங்கினரிடம் தற்போது உள்ளன. இப்படங்கள் 8 மி. மீ. 16 மி மீட்டர்களில் காண்பிக்கப்படும்.

## சுதந்திர வீரர்களுக்கு டாக்டர் பெரேரா அஞ்சலி

இந்த நாடு பூரண சுதந்திரமுள்ள நாடாகப் பரிணமிப்பதற்குப் பல தியாகங்களைப் புரிந்த வீரர்களை டாக்டர் என்.எம். பெரேரா நினைவுகூர்ந்தார். அனகாரிக தர்மபால, எப். ஆர். சேனநாயகா, சேர் பொன். அருணுசலம், சேர் பொன். இராமநாதன், டபிள்யு. ஏ. டி. சில்வா, டி. எஸ். சேனநாயகா போன்ற விடுதலை வீரர்களை ஞாபகப்படுத்தினர்.

லங்கா சமசமாஜக்கட்சி இன்று இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வது பற்றி அவர் மகிழ்ச்சி தெரிவித்தார். லண்டனில் ஒரு சிறு அறையில் இந்த இயக்கத்தைப் பல ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்தபோது இப்படி இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வாய்ப்புக் கிட்டுமென்று நினைக்கக்கூடவில்லையென்ருர்.

இலங்கை குடியரசாவதற்கு காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யு. ஆர். டி.பண்டாரநாயகாவே மூலகர்த்தா என்று அவர் வர்ணித்தார்.

தேசிய சமத்துவத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் எடுக்கப்படவேண்டுமென்று அவர் வலியுறுத்தினர்.

# கணவரின் கனவு நனவாவதில் மகிழ்ச்சி

இதன்பின்னர் தலைவர் திரு ஸ்டான்லி திலகரத்தின பிரதமமந்திரியைப் பேசும்படி அழைத்தார்.

பிரதமர் பேசும்போது இந்தக்கூட்டத்துக்காக பிரதிநிதிகளைத் தாம் அழைத்ததின் காரணத்தை விளக்கினர்.

பிரிட்டிஷாரினல் தீர்மானித்து வழங்கப்பட்ட அரசியல் அதிகாரங்கள் நம்மைக் கட்டுப்படுத்தாத வகையில் நாம் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும், அரசியல் திட்டமொன்றை உருவாக்கும் விதத்தில் செயல்படுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காகவே இந்தக் கூட்டத்தை அமைத்தேன் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

இந்நாட்டுல் குடிமக்கள் அனைவரதும் அடிப்படைஉரிமைகள் புதிய அரசியல் திட்டத்தில் பாதுகாக்கப்படும் என்று பிரதமர் கூறினர்.

இந்நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், மலாயர் போன்ற இனப்பிரிவினரும், பௌத்தம், இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதத்தவர்களும் ஒற்றுமையாக வாழவேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினர்.

இந்தநாட்டில் சுதந்திரமான ஆதிபத்தியமுள்ள குடியரசொன்றை நிறுவுவதற்கு தமது கணவரான காலஞ்சென்ற திரு எஸ் டபிள்யு ஆர் டி பண்டாரநாயக்க கண்ட கனவு இன்று நனவாவதுபற்றி தனிப்பட்டமுறை



யில் நாமும் மகிழ்ச்சியுறுவதாகப் பிரதமர் குறிப்பிட்டார். இதைக் குறிப்பிடும் பொழுது பிரதமர் சிறிது தளர்ந்த குரலில் பேசினர். இந்தக்கூட்டம் நடைபெற வதற்கு எல்லாரும் ஒத்துழைப்பளித்ததுபோல் அரசியல்கூட்டத்தை உருவாக்குவதிலும் ஆதரவு அளிக்க வேண்டுமென்று பிரதமர் கேட்டுக்கொண்டார். தமது அழைப்பை ஏற்று வந்தமைக்காக பிரதிநிதிகளுக்கு நன்றிதெரிவித்த பிரதமர். பிரதிநிதிகள் தமது கருத்துக்களைக் கூறுவதற்கு சகல வசதிகளும் இருக்குமென்றும்கூறினர்

அரசியல்நிர்ணயசபை இம்மாதம் 29-ந் திகதி கூடவேண்டுமென்ற பிரதமரின் பிரேரணையை டாக்டர் என் எம் பெரேரா வழிமொழிந்து பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

மசகிடும் சேவையில் (சேர்விஸ் ஸ்ரேசனில் வேலை செய்து அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. நேர்முகமாகச் சமுகமளிக்கவும். லிங்கோலுப்பிறிக்கேசன் சேர்விஸ், பலாலி வீதி, கோண்டாவில். 3200

### கல்வி

சித்தி நிச்சயம். ஜி. சி. ஈ. (சாதாரணம்) கலை, உயர்தரம், சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல். பகல் வகுப்புகளுக்கு பிரவேசங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யூனைட்டெட் மகளிர் கல்லூரி, நெல்லியடி, கரவெட்டி. 3187

### தேவை

யாழ்ப்பாணம் கே. கே எஸ். வீதி மைலண்ட்ஸ் மேல்மாடியிலுள்ள நெசவு ஆலை (புதிய நிர்வாகத்தின் கீழ் இயங்கும்) மாலினி இன்டஸ்றீஸுக்கு அனுபவமுள்ள நெசவாளர்கள் தேவை. காலை 10- மாலை 3 மணிக்கிடையில் நேரில் வந்து சந்திக்கவும். 3002

### தவறிவிட்டது

அளவு மட்டம் (Armstrong scale) வெள்ளை நிறம், பச்சை நிற பெட்டியில் உள்ளது. யாழ்ப்பாணத்தில் தவறியது. எடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைப்பவருக்கு சன்மானம் கொடுக்கப்படும். 3001

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## யாழ்ப்பாண மாநகரசபை ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் புதிய மத்திய சந்தை கட்டுமிடத்தில் நிற்கும் ஒரு மகோக்கனி மரம் இம்மாதம் 30-ந் திகதி மு. ப. 11 மணிக்கு அவ்விடத்திலே வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்காரர் முழுப் பணத்தையும் உடனே செலுத்தி 7-8-70ம் திகதிக்குள் மரத்தைத் தறித்து அப்புறப்படுத்திவிட வேண்டும். மேலும் விபரம் மாநகர மராமத்துப் பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகரசபை ஆணையாளர்.
மாநகரசபை,
யாழ்ப்பாணம்,
16-7-70. 2374

## வீதியைத் திருத்தக் கோரிக்கை

கொழும்புத்துறை, ஞாயிறு


அரியாலைகிழக்கு வீதியைச் செப்பஞ்செய்யும் கோரிக்கை ஒன்றை அரியாலை மக்கள் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அரியாலை கிராமசபை உறுப்பினர் மூலம் அனுப்பியுள்ள முறையீட்டில் சீர்கெட்ட வீதியினை திருத்தஞ்செய்யக் காலதாமதப்படுத்தினால் அரியாலை-யாழ்ப்பாணம் பஸ் சேவை பாதிக்கப்படக்கூடுமென்று குறிப்பிட்டுள்ளனர்.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ்—ஜெயந்தி நடித்த
இரு கோடுகள்

2வது வாரம்!
ராஜா - யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள் பிரிபோயா, போயா 4 காட்சிகள்
காந்தராவ், ராஜ்ஶ்ரீ, ஜெயந்தி நடித்த
மாவீரன் ஜெயசீலன்


## அறிவித்தல்



சுருட்டுத் தொழிற்சாலை உரிமையாளர் ஆறுப்பிள்ளை கந்தையா அருளம்பலம் 15-7-70ல் காலமாகிவிட்டார். அவரினால் குரும்பசிட்டி ஈஸ்வரி வாசத்தில் 14 4-1969ல் ஆரம்பிக்கப்பட்ட தொழில் தொடர்பாக உள்ள கொடுக்கல் வாங்கல் விபரங்களை கீழ்க்காணும் முகவரிக்கு 1-8-1970க்கு முன்னர் ஆதாரத்துடன் அறிவிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

அ. குகதாசன்,
அ. சிவதாசன்.

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை,
18-7-70. 2375

## இன்றைய பலன்

ஆடி மாதம் 4-ம் திகதி
[20-7-70]

மேஷம்- அன்னையின் அன்பு தாராளமாகக் கிடைக்கும். செய்காரியங்களில் தனிப்புகழ் பரவும்.

ரிஷபம்- உள்ளம் உவகையால் துள்ளும் உறவுமுறைகளில் இறுக்கமேற்படும். அறவழியில் நாட்டத்திற்கு இடமுண்டு.

மிதுனம்- இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று இலாபகரமான தினம். வாகனச் சொந்தக்காரர்கள் அதிக பயனடைவர்.

கடகம்- நீண்ட நாள் எதிர்பார்த்த நல்ல திருப்பம் ஏற்படமுடியும். குடும்ப விவகாரங்களில் பிணைப்புகள் இறுகும்.

சிங்கம்- செய்தொழிலில் தளர்ச்சி ஏற்படும் சதி செய்வதற்கு சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பர்.

கன்னி- பொதுப்பணமூலம் புகழுக்கு இடமுண்டு. அரசியல்வாதிகளுக்கு அதிஷ்டம் அடிக்கலாம்.

துலாம்- வெற்றிப்பாதை

யாழ். பழைய பூங்காவில் நடைபெற்ற குருளைச் சாரணர் விழா

# கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி ரோட்டம் போலைச் சுவீகரித்தது

யாழப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்டத்தில் குருளைச் சாரணர் இயக்கம் மிகச் சிறந்த முறையில் இயங்குகிறது இங்குள்ள குருளைச் சாரண ஆசிரியர்கள் மிகஉற்சாகத்துடன் ஈடுபட்டு எதுவித ஊதியமுமின்றி தங்கள் அரிய நேரத்தைச் செலவுசெய்து இச்சிறுவரைத் திறம்பட ஒழுக்கத்தில் பயிற்றி, இவர்களை நாட்டின் வருங்காலத்தின் சிறந்த பிரயோசனமான பிரசைகளாக்குவதற்குத் தங்களை அர்ப்பணித்துள்ளனர். பெற்றோரும், ஆதரவாளர்களும் அவர்களுக்கு ஏற்ற ஆதரவும் உதவியும் அளித்து இவ்வியக்கமூலம் இன்னும் பலர் குருளையர் மந்தைகளில் சேர்ந்து நன்மைபெற வழிகாட்டவேண்டும்'.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட வருடாந்த குருளைச் சாரணர் விழாவுக்கு இலங்கைச் சாரண இயக்கத் தலைமை அலுவலகத்திலிருந்து பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆகேலாத் தலைவரும், குருளைச் சாரண உதவிப் பிரதம ஆணையாளருமான திரு. இரத்தினம் ஆபிரகாம் தமது உரையில் குறிப்பிட்டார் இவ்விழா யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நடைபெற்றது.

யாழ் - மாவட்ட உதவிக் குருளைச் சாரண ஆணையாளர் திரு. டபிள்யூ. என். தேவகடாட்சம் பிரதம விருந்தினரை வரவேற்றுப் பேசினார். கொழும்பு, கண்டி, நாவலப்பிட்டி, நீர்கொழும்பு, திருக்கோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து உதவிக் குருளை ஆணையாளர்களும், குருளை ஆசிரியர்களும் இவ்விழாவுக்குப் பார்வையாளராக வந்திருந்தனர்.

யாழ் - மாவட்ட ஆணையாளர் திரு. ஜே. ஜி அரசரத்தினம் பிரதம விருந்தினரின் சாரணியச் சேவையை எடுத்துக்கூறி, இம்முறை அகில இலங்கைக் குருளையர் மந்தைகள் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக் குருளையர்மந்தையே முதலாவதாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும். இத்தருணத்தில் பிரதம விருந்தினராக திரு. இரத்தினம் வருகை தந்திருப்பது [illegible] மென்று குறிப்பிட்டார் [illegible] குருளையர் மந்தைகளிலிருந்து 350க்கு மேற்பட்ட குரு

கிறிஸ்தவகல்லூரி, யூனியன் கல்லூரி, செங்குந்தா இந்துக்கல்லூரி

கைப்பணி: செங்குந்தா இந்துக்கல்லூரி, அச்சுவேலி சென்திரேசா பாடசாலை - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி. யாழ்ப்பாணக் கல்லூரி.

கிச்சின்பாண்ட்: யாழ் மத்திய ல்லூரி, சென்பற்றிக்ஸ் கல்லூரி, சென் ஜோண் பொஸ்கோ பாடசாலை.

நாடகம்: செங்குந்தா இந்துக்கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி.

குக்ஸ்ரோட்டம் போல்: கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி முழுப் போட்டிகளில் யாழ்' மத்தியகல்லூரி இரண்டாவது இடத்தையும், செங்குந்தா இந்துக்கல்லூரி மூன்ருவது இடத்தையும் பெற்றன.

## பத்திரிகைக்கலை மாணவன் 7 மைல் ஓட்டத்தில் முதலிடம்

யாழ்ப்பாணம், திங்.

பலாலி கனிட்ட பல்கலைக்கழக மாணவமன்ற வெற்றிக்கிண்ணத்துக்கும் செல்வி தம்பிப்பிள்ளையின் சேர் பொன். இராமநாதன் வெற்றிக்கிண்ணத்துக்கும் கலாநிதி சுந்தரலிங்கத்தின் வறுத்தலைவிளான் வெற்றிக்கிண்ணத்துக்குமான ஏழு மைல் குறுக்கோட்டப் போட்டியில் பலாலிகனிட்ட பல்கலைச்கழகப் பத்திரிகைக் கலைத்துறையைச் சேர்ந்த செல்வன் வை. இராசரத்தினம் 49 நிமிடம் 31 செக்கனில் ஓடி முடித்து முதலாவது இடத்தைப்பெற்றார்.

போட்டி முடிவுகள் வருமாறு: 1-வது வை. இராசரத்தினம் (பத்திரிகைக்கலை), 2-வது எஸ். எஸ். நவயோகானந்தன் (கொள்வனவு விற்பனவுத்துறை), 3-வது ஏ. எல். எம். சலீம் (கணக்காய்வியல்)

நாற்பதுக்கதிகமான வீரர்கள் கலந்துகொண்ட இப்போட்டியில், வெற்றிபெற்ற முதல் மூன்று வீரர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களும் ஓடி முடித்த வீரர்களுக்குத் தராதரப்பத்திரங்களும், பல்கலைக்கழக இல்ல விளையாட்டுப்போட்டியின்போது வழங்கப்படும். (தே. நி)

### பேச்சுப்போட்டியில் பரிசு பெற்றோர்

ஊர்காவற்றுறை ஞாயிறு

சரவணை தேவபுரம் [illegible]திர் வேலாயுதசுவாமி கோவிலில் சரவணை சைவ இளைஞர் சங்க ஆதரவில் நடைபெற்ற [illegible] குருபூசையை [illegible] மாணவரிடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் பரிசு

## இடமாற்றத்துக்கு ஆட்சேபம்

அம்பன், ஞாயிறு

நாகர்கோயில் மகாவித்தியாலய அதிபர் திரு. கந்தையாவின் இடமாற்றத்தை ஆட்சேபித்து நாகர்கோயில் கிராமமுன்னேற்றச் சங்கமும், பெற்றோர் ஆசிரியர்சங்கமும் கிழைக்கரை அபிவிருத்தி முன்னணியும் கல்வியதிபதிக்குத் தந்தி அனுப்பி வைத்துள்ளது, பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினத்திற்கும் இது சம்பந்தமானதந்தியை அனுப்பி வைத்துள்ளது.

### சங்கானையில் சு. கட்சிக்கிளை

சங்கானை, ஞாயிறு

சங்கானையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளைக் காரியாலயம் ஒன்றுதிறந்துவைக்கப்பட்டுள்ளது. இதனை கலாச்சார-விவகார உதவி அமைச்சர் திரு. சோமவீர சந்திரசிறி சம்பிரதாய முறைப்படி திறந்துவைத்தார், திரு. செல்லப்பா சீவரத்தினம் தலைமையில் வைபவம் நிகழ்ந்தது.

### இடமாற்றம்

வாழைச்சேனை, ஞாயிறு

வந்தாறுமூலை மத்தியமகாவித்தியாலயத்தில் விஞ்ஞானம் போதிக்கும் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. எஸ் எஸ் மனோகரன் மன்னார் மாவட்டத்தைச்சேர்ந்த முருங்கன் மகாவித்தியாலயத்திற்கு

## கல்லூரித் தினம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இளவாலை புனித என்றியரசர் கல்லூரித்தினம் கொண்டாடப்பட்டது, பாடசாலை மாணவர்களின் நாடகங்களும் சிறு மாணவரின் அபிநயப்பாட்டுநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. 'இளைஞனும் பாப்புவும்' என்ற விடயம்பற்றி செல்வன் மரியநேசன் உரை நிகழ்த்தினார்.

### கசிப்பு வேட்டை

மாவிட்டபுரம், ஞாயிறு

சுன்னாகம் பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலின்பேரில் உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் வி. செல்லையா, சார்ஜன்ட் பி எம். ஏ. பொன்னுத்துரை ஆகியோர் கல்லாக்கட்டுவன்என்னுமிடத்தில் உள்ள ஒரு வீட்டை திடீர்சோதனையிட்டபோது அவ்வீட்டில் இருந்து 55ரும் கசிப்பு கைப்பற்றப்பட்டது.

இதுகுறித்து கே. சரவணை என்பவர் சந்தேகத்தின் பேரில்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### புனரமைப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

தெல்லிப்பளை புகையிரத நிலையம் நவீன வசதியுடன் மிகவிரைவில் புனரமைப்புச் செய்யப்படவிருக்கிறது. இதற்கான பேச்சுவார்த்தைகள் சம்பந்தப்பட்டவர்களுடன் நடைபெறும்.

### "சேமிப்பு இயக்கத்தினை ஆதரியுங்கள்"

சுழிபுரம், ஞாயிறு

"சங்கங்களின் முக்கிய நோக்கங்களில், சிக்கன சேமிப்புத் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வருதல். அங்கத்தவர்கள் சேமிப்பு இயக்கத்தில் அக்கறை காட்டுவதனல் எதிர்காலத்தில் சுயதேவைகளைப் பூர்த்திசெய்யமுடியும். அரசாங்கத்தில் நிதி நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. இப்போதைக்கு அரசாங்க உதவியை எதிர்பார்க்கமுடியாது'

இவ்வாறு வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைக் காரியதரிசி திரு. எஸ். கந்தையா ஜே. பி மாதகல் நுணசை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 27வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்குச்

## எம்.ஸி.க்கு காரைநகரில் வரவேற்பு

யாழ்ப்பாணம், திங்கள்

வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் முன்னேற்றச் சங்கமும் அதன் அனுசரணையுடன் இயங்கும் காரைநகர் எட்டுக் குறிச்சி சமுதாய மறுமலர்ச்சிக் கழகமும் நியமன எம்.பி. திரு எம் ஸி. சுப்பிரமணியத்திற்கு வரவேற்பொன்று அளிக்கவிருக்கின்றன. இம் மாதம் 25-ம் திகதி களபூமியில் நடைபெற விருக்கும் இவ் வரவேற்பு வைபவத்திற்கான ஏற்பாடுகளை சிகை அலங்கரிப்பாளர் சங்கச் செயலாளர் திரு க நாகலிங்கமும், மறுமலர்ச்சிக் கழகப் பொதுச் செயலாளர் திரு அ ஜெயரத்தினமும் கவனித்து வருகின்றனர்.

### 'சிங்களத்தை ஒத்திபோடவும்'

காலி, ஞாயிறு

சமீபத்தில் நடைபெற்ற காலி வழக்கறிஞர் சங்கத்தின் விசேஷ பொதுக்கூட்டத்தில் நீதிமன்றங்களில் சிங்களத்தைக் கொண்டுவருவதை எதிர்த்துக்கொண்டு வரப்பட்ட ஒரு தீர்மானம் தோல்வியடைந்தது.

மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. டி ஏ. விக்கிரமசிங்கா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேற்படி தீர்மானத்தைக் கொண்டுவந்த திரு. என் விக்கிரமசிங்கா- என்னைப் போன்ற பலர் ஆங்கிலத்தில் கற்றுள்ளனர், சட்டத்துறையிலும் ஆங்கிலத்திலேயே கடமையாற்றுகின்றனர். வெகு விரைவில் வழக்கு விசாரணைகளை நடத்துதல் வழக்கறிஞர்களுக்கு கஷ்டமாகவேயிருக்கும். எனவே நீதிமன்றங்களில் சிங்களத்தைக்கொண்டுவரும் தீர்மானம் அடுத்து 2 அல்லது 3 வருடங்களுக்கு ஒத்திப் போடப்படவேண்டும் எனக் கூறினார். இவரது தீர்மானத்தை ஆதரித்து 6 பேரும் எதிர்த்து 24 பேரும் வாக்களித்தனர்.

### கூட்டுறவுப் பரிசோதகர்கழகம்

உடுப்பிட்டி, ஞாயிறு

இலங்கைக் கூட்டுறவுப் பரிசோதகர் கழகத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு ஆர். ஜேசுதாசன், காரியதரிசி: திரு. மு. ஜெயராசசிங்கம், தனதி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நடித்த

# மாவீரன் ஜெயசீலன்

வின்ஸர் — யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜி கணேசன் (இருவேடங்களில்
பத்மினி - ராகினி - தங்கவேலு
நடித்த

# உத்தம புத்திரன்

(புதிய கொப்பி)

இப்பொழுது திரையிடப்படுகிறது!
இங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
திரைகளில்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ வி.எம்.ராஜன்
★ செளகார் ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'

# துணைவன்

கதை வசனம் பாலமுருகன்
சங்கீதம் K.V. மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்


...துக்கொண்டிருப்பர்.

கன்னி- பொதுப்பண மூலம் புகழுக்கு இடமுண்டு. அரசியல்வாதிகளுக்கு அதிஷ்டம் அடிக்கலாம்.

துலாம்- வெற்றிப்பாதையில் வீறுநடைபோடுவீர்கள். தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும்.

விருட்சிகம்- பொருள் கைவிட்டுப்போகும். மற்றவர்களிடத்தில் பொல்லாங்கு கேட்கநேரிடும்.

தனு- வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும். எதிலும் தாக்கமனப்பான்மை உருவாகும்.

மகரம்- எவ்விடத்திலும் அமைதிவேண்டும். கடமையாற்றுமிடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும்.

கும்பம்- புதிய கண்டுபிடிப்புக்களில் அதிகஆர்வம் பிறக்கும் தூரச்செய்தியொன்று உற்சாகத்தை ஏற்படுத்தும். நல்லநாள்.

மீனம்- ஏமாற்றத்தின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
சனிபோயா,போயா 2-30மணி
A V M ராஜன்-ஜெயலலிதா
நடித்த
மேஜர் சந்திரகாந்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30,9-30மணி
போயா, பிரிபோயா 2-30
எம் ஜி. ஆர். — சிவாஜி
நடித்த
கூண்டுக்கிளி

MANOHARA
JAFFNA
Daily4-45,7-00&9-45p m.
Poya-Prepoya 10-30 a.m.
Terry Moore,
Ben Johnson
in
MIGHTY JOE YOUNG
(Color)

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 P.M.
Poya, Pre-poya 10.30 a.m
Fred Mac Marry,
Tommy Steele
in
THE HAPPIEST
MILLIONAIRE


பட்டிருக்கும். இத்தருணத்தில் பிரதம விருந்தினராக திரு: இரத்தினம் வருகைதந்திருப்பதுமிகப் பொருத்தமென்று குறிப்பிட்டார் 12 குருளையர் மந்தைகளிலிருந்து 350க்கு மேற்பட்ட குருளையரும், அநேக பெற்றோரும். பார்வையாளரும் விழாவுக்குச்சமுகமளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

குருளையர் விழாவில் நடைபெற்ற குருளையர் மந்தைகளின்போட்டிகளின் முடிவுகள் வருமாறு:—

குருளையர் கீதப்போட்டி: சென் ஜோண் பொஸ்கோ பாடசாலை, யாழ் மத்தியகல்லூரி, ஆச்சுவேலி தென் திரேசா பாடசாலை.

விளையாட்டு: கோப்பாய்

## விளையாட்டுப் போட்டி

வாழைச்சேனை, ஞாயிறு

வந்தாறுமூலை மத்தியமகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் மேற்படி கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

அருணாசலம் இல்லம் முதலாவது இடத்தையும், விபுலாநந்த இல்லம் இரண்டாவது இடத்தையும், நாவலர் இல்லம் மூன்றுவது இடத்தையும், குமாரசாமி இல்லம் நான்காவது இடத்தையும் பெற்றுக்கொண்டன

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 20—7—70

(காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 குரல்வகை, 7-30 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர் கண்டுபிடிப்புகள்.

இரவு 6-15 பாமாலை, 7-00 வேல் விழா, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 தொடக்கம் 12-00 மணி வரை வேல் விழா அஞ்சல்.

வேலாயுதசுவாமி கோவிலில் சரவணை சைவ இளைஞர் சங்க ஆதரவில் நடைபெற்ற மணிவாசகர் குருபூசையையொட்டி மாணவரிடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் பரிசு பெறுவோர் விபரம் வருமாறு

ஆண்கள்: கே. கிருபாகரன், ப. தேவதாஸ், பொ. வசந்தராசா பெண்கள்: மு. குலராணி, சி. செல்வராணி, வி. தேவிகா.

## காலி நீதிமன்றத்தில் சிங்களத்தில் விசாரணை

காலி, ஞாயிறு

காலியில் நடைபெற்ற தென்பகுதி அசைஸ் விசாரணையின்போது வரலாற்றிலேயே முதல் தடவையாக விசாரணைகள் சிங்களத்தில் நடைபெற்றன. நீதிபதி ஜி. பி. ஏ. சில்வா, முடிக்குரிய வழக்கறிஞர் யாவரும் சிங்களத்திலேயே உரையாற்றினர்.

இவ்விசாரணையின் போது சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதற்காகவும், ரி. சிறிசேன என்பரைக் கொலை செய்ததற்காகவும் 5 பேர் குற்றம் சாட்டப்பட்டு விசாரணை செய்தனர். வழக்கறிஞர் கே. வி. பி. ஜயதிலகா குற்றவாளிகளைப் பிணையில் விடுமாறு கோரும் கோரிக்கையை சிங்களத்தில் சமர்ப்பித்தார். முடிக்குரிய வழக்கறிஞர் கோசல விஜேதிலகாவும் சிங்களத்தில் பதிலளித்தார். நீதிபதி ஜி. பி. ஏ. சில்வாவும் தெளிவாகச் சிங்களத்தில் பதிலளித்தார். 5-வது குற்றவாளியைப் பிணையில் விட மறுத்து மற்றும் நால்வரையும் பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்தார்.

## மீனவர் கடலில் மூழ்கி மரணம்

கொழும்புத்துறை, ஞாயிறு

ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற பாஷையூரைச் சேர்ந்த தம்பியையா விசேந்தி (வயது 23) என்னும் இளைஞர் வலியினால் கடலில் வீசப்பட்டு நீரில் மூழ்கி மரணமானார்

கூடிச்சென்ற சிவர்கள் வேறுசிலரின் உதவியுடன் கரைசேர்ந்தனர் இறந்த நபர் தொய்வு நோயினாலும் வலியினாலும் பலகாலம் பீடிக்கப்பட்டிருந்தவராம்.

வித்தியாலயத்தில் விஞ்ஞானம் போதிக்கும் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. எஸ் எஸ் மனோகரன் மன்னார் மாவட்டத்தைச்சேர்ந்த முருங்கன் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## 150 ஆண்டு விழா

பண்டத்தரிப்பு, ஞாயிறு

திருக்குடும்ப கன்னியர் சபை அடியிடப்பட்ட 150 ஆண்டுவிழா இவ்வருட இறுதியில் கொண்டாடப் படவிருக்கிறது.

டுறவுச் சங்கத்தின் 27வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்குச் சங்கத் தலைவர் திரு. வ. சதாசிவம் தலைமைவகித்தார்.

கூட்டுறவுப் பரிசோதகர் திரு. ஆ. வீரசிங்கம், கமத்தொழில் விஸ்தரிப்பு உத்தியோகத்தர் ஆகியோருடன் வேறு சிலரும் பேசினர்.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு.வ. சதாசிவம்,

நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு ஆர். ஜேசுதாசன், காரியதரிசி: திரு. மு. ஜெயராசசிங்கம், தனாதிகாரி: திரு. சு. மயில்வாகனம்.

ஒன்பது பேரடங்கிய நிர்வாக சபையொன்றும்தெரிவு செய்யப்பட்டது.

உப தலைவர்: திரு: தா. அம்பலம், காரியதரிசி: மு. ஓங்காரசோதி. ஆறு பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.





அதன் காரணங்கள்—

(அ) 'ரவி' முடி உயர்தரமான சின முடி. அவை உலகிலேயே சிறந்தவை. உயர்ந்த ரக பிரஷ் தயாரிப்பாளர்கள் இதனையே பாவிக்கின்றனர்.

(ஆ) இம்முடிகள் பற்றிய இரண்டாம் குறிப்பு: ரவி பிரஷ்களில் அதிக முடிகளை அடக்கியுள்ளோம். வெறும் வேடிக்கைக்காக அல்ல. மிக நெருக்கமான முடிகள் உள்ள பிரஷ் அதிக அளவு வர்ணத்தை உள்ளடக்குவதால் வர்ணம் விரைவாகவும், மிருதுவாகவும் பாவுகின்றது.

(இ) 'ரவியின்' தகடுகள் உருக்காலாக்கி நிக்கல் பூசப்பெற்றவை. முடிகளை உறுதியாகப் பற்றிக்கொள்பவை, இக்காரணத்தினால் சுவர்களில் 'ரவியினால்' வர்ணம் தீட்டும் பொழுதும் வேறு வர்ண வேலைகள் செய்யும்பொழுதும் கழன்ற முடிகளையோ அல்லது கீற்றின் அடையாளங்களையோ காண்பதில்லை.

(ஈ) 'ரவியின்' கைப்பிடி பலம் வாய்ந்தது. நல்லுருவம் அமைந்தது. அத்துடன் அதன் தரம் ஒரு காலும் குறையாதது.
இவைகள் எல்லாவற்றையும் ஒருங்கே சேர்த்துக் கூறினால் 'ரவி' உங்களுக்குப் பொருள் ஈட்டுகின்றது. வேறு விதமாகக் கூறினால் வர்ணம் தீட்டும் வேலையைக் குறைந்த செலவில் செய்ய உதவுகின்றது

ஆகவே "ரவியை" கேட்டு வாங்குங்கள். ரவி

IQ-MASTERS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாஸ்கோ அறிக்கைபற்றி மேற்குநாடுகள் கவனமாக ஆராய்கின்றன

## மந்திரி பிரதானிகளுடன் நாஸர் தீவிர ஆலோசனை

கெய்ரோ, ஜூலை 19

மாஸ்கோவில் சோவியத் தலைவர்களுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் கேணல் நாஸர் நாடுதிரும்பியபின் தமது முக்கிய ஆலோசகர்களுடனும் மந்திரிகள் பிரமுகர்களுடனும் ஆலோசனைகள் கலந்துவருகின்றார்.

மேற்காஸிய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு சோவியத் யூனியனும் ஐக்கிய அரபுக் குடியரசும் புதிய திட்டமொன்றை வரைந்திருப்பதாக சொல்லப்படுகின்றது. மேற்காஸியநிலைமைகுறித்து புதிய ராஜதந்திர நடவடிக்கைகள் எடுப்பது பற்றி இவர்கள் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேசமயம் அதிபர் நாஸர் சோவியத் தலைவர்களைச்சந்தித்துவிட்டுத் திரும்பியதைத்தொடர்ந்து மாஸ்கோவில் வெளியிடப்பட்ட அறிக்கையை மேற்கு நாடுகள் மிகவும் உன்னிப்பாக ஆராய்ந்துவருகின்றன.

மேற்காஸிய நெருக்கடியைச் சமாதானமாகத் தீர்த்துக்கொள்வதற்கு இன்னும் கதவுத்திறந்தே இருக்கின்றது என்பதை இந்த அறிக்கையிலிருந்து அறியமுடிவதாக பிரிட்டிஷ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்காவிலும் மாஸ்கோ அறிக்கை பற்றி விரிவாக ஆராயப்படுகின்றது. ஏற்கனவே அமெரிக்கா தெரிவித்திருந்தயோசனைகள் சம்பந்தமாக சோவியத் யூனியனிடமிருந்து தீர்க்கமான பதிலொன்று வரும்வரை அமெரிக்க அரசாங்கம் காத்திருக்கப்போவதாகக் கருதப்படுகின்றது.

இஸ்ரேலில் எல்லைப்புறங்களிலும் குறிப்பாக சூயஸ் பகுதியில் ஆய்வுகள் நடத்துவதற்காக வந்திருந்த அமெரிக்க குழுவொன்று தனது பணியை முடித்துக்கொண்டு அமெரிக்காவுக்குத் திரும்பியிருக்கின்றது. சூயஸ்கால்வாய்ப் பகுதியில் அரபுக் குடியரசின் ராணுவ நிலைகள் சோவியத் நிபுணர்களின் உதவியுடன் பலப்படுத்தப்பட்டிருப்பது பற்றி இவர்கள் ஆராய்ந்திருக்கக் கூடும் என்று கருதப்படுகின்றது.

### இஸ்ரேலிடம அணுகுண்டு?

இஸ்ரேல் அரசாங்கத்திடம் அணுகுண்டு இருப்பதாக அமெரிக்கப் பத்திரிகையொன்றில் வெளியான செய்தி மேற்காஸியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்தச் செய்தியில் எதுவித உண்மையுமில்லையென இஸ்ரேல் அதிகாரிகள் நேற்று மறுத்தனர்.

இஸ்ரேலியரின் இந்த மறுப்பை அமெரிக்கா ஏற்றுக்கொண்டிருப்பதாகவும்கூறப்படுகின்றது அணுகுண்டு தயாரிப்பதற்குத் தேவையான தகுதிகள் உள்ள பல நாடுகள் இருக்கின்றனவென்றும் ஆனல் அவைகள் அணுகுண்டுகளைத் தயாரித்துவிட்டதாகக் கருதமுடியாதென்றும் அமெரிக்க அதிகாரிகள் கருதுகிறார்கள்.

# கடந்த ஆட்சிக்காலத்தில் நாம் கஷ்டப்பட்டோம்

## ஆசிரிய சங்கக் கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

தேசிய அரசாங்க காலத்தில் கல்விமந்திரியின் கெடுபிடிகளினல் ஆசிரிய தொழிற் சங்கங்கள் மிகவும் அவல நிலைக்காளாயின 'சியவச' சீட்டு விற்பனைமூலம் ஆசிரியர்கள் இடமாற்றங்களும் தண்டனைகளும்பெற்றனர். தற்போதுள்ள மக்கள் அரசாங்கத்தில் ஆசிரியர்கள் புத்துணர்ச்சிபெற்றுள்ளனர்.

அகில இலங்கை சுவீகரிக்கப்பெற்ற தமிழ் பாடசாலை ஆசிரியர் சங்கத்தின் நான்காவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் சங்க செயலாளர் திரு. த. திருநாவுக்கரசு பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

யாழ்ப்பாணம் மலேயா கபே மேல்மாடியில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு சங்கத் தலைவர் திரு. எஸ். செல்லையா தலைமை வகித்தார்.

திரு. திருநாவுக்கரசு மேலும் கூறியதாவது: மக்கள் அரசாங்கத்தின் கீழ் ஆசிரியர் கண்ணியமாக நடத்தப்படுகின்றனர். இத்தகைய முற்போக்கான கொள்கைகளுக்காக கல்வி மந்திரியை நமது சங்கம் பாராட்டுகிறது.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: எஸ். செல்லையா செயலாளர்: திரு. த. திருநாவுக்கரசு, துணைச்செயலாளர்: திரு. என். யோகராசா, பொருளாளர்: திரு. ச. கைலாசபிள்ளை, துணைத் தலைவர்கள்: திருவாளர்கள் க. சிற்றம்பலம், கா. முருகப்பா, திரு. க. முத்துச்சாமி, எஸ். இராசா, நா. கந்தையா, கணக்காய்வாளர்: திருமதி எஸ். பரமானந்தம். 9 பேர் கமிட்டி உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

# 'கலைக்கழகத்தில் இவரையும் நியமிக்குக

மாவிட்டபுரம், ஞாயிறு

ஈழத்தின் தலை சிறந்த நாடக நடிகரும் தயாரிப்பாளரும் இயக்குனருமான நடிகமணி வி. வி. வைரமுத்துவை புதிதாக அமைக்கப்படவிருக்கும் கலைக்கழகத் தமிழ் நாடகக்குழுவில் ஒரு உறுப்பினராக நியமிக்குமாறு கலைகலாச்சார அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில்காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றத்தினர் கோரியுள்ளனர்.

இசைக் கலையிலும் இசைக் கருவிகள் வாசிப்பதிலும் தேர்ச்சி பெற்றவரான நடிகமணியைக் கலைக்கழகநாடக குழு உறுப்பினராக நியமிப்பதன்மூலம் ஒரு சிறந்த கலைஞருக்கும் கலைக்கழகம் இடம் அளிப்பதாக அமையும் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அந்நிய ஆட்சிக்காலத்தில் ஏற்படாத சோதனையாம்

மாவிட்டபுரம், ஞாயிறு

'எக்காலமும் ஏற்படாத சோதனைகள் சைவசமயத்துக்கு இன்றைக்கு ஏற்பட்டுள்ளது. போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆண்டகாலத்தில் எமது சமயம் எப்படி பாதிக்கப்பட்டதோ அக்காலத்தைவிட இன்றைய பாதிப்பு ஒருபடி அதிகமாகும்.

இவ்வாறு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் கிழக்கு வாசலில் நடைபெற்ற வழிபடுவோர் சங்கக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய வேதாகம சைவ சித்தாந்த சபைத் தலைவர் பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் கூறினர்.

திரு. ஸி. சுந்தரலிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பிரம்மஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள் பேசுகையில் கூறியதாவது: 'இப்போது கதவு திறந்து பூசை நடத்த எம்மால் முடியும்' ஆனல் கதவு திறந்தால் பலாத்காரம் தலைதூக்கும் என்ற காரணத்தால் தான் கதவை பூட்டியுள்ளோம். ஒதுபோதும் ஆகமத்துக்கு விரோதமாக பலாத்காரத்துக்கு இடம் அளிக்க மாட்டோம். சமாதானமான முறையில்தான் இப்பிரச்னை தீர்க்க முயல வேண்டும்

இப்போது மாவிட்டபுரத்தில் நடக்கும் போராட்டம் ஆலயப் பிரவேசப்போராட்டம் அல்ல. அது 8-ந்திகதியுடன் முடிவடைந்து விட்டது. இன்று நடப்பதுகதவு திறப்பதா? பூட்டுவதா? என்ற போராட்டம். பொலிசார் எம்முடன் நடாத்தும் போராட்டத்தினல் தான் ஆலய பூசைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இது சைவ சமயத்துக்கு தாக்கம் கொடுத்த செயல் ஆகும். 100 வருடங்களாக கதவு பூட்டப்பட்டிருந்தாலும் இதயத்தால் நாம் முருகனுக்கு பூசை செய்தே தீருவோம்.

சைவ அனுட்டான பாதுகாப்புச்சபைத்தலைவர் திரு. க. சிவலிங்கம் பேசுகையில் டி. எஸ். சேனநாயக்கா தமது காலத்தில் சாதி ஒழிப்பு, பலியிடுதல் சம்பந்தமாக ஒரு விசாரணைக் குழுவை நியமித்தார். அது நாடெங்கும் வாக்குமூலங்களைப் பெற்று பிரதமரிடம் சமர்ப்பித்தபோது திரு. சேனநாயக்கா இதுசம்பந்தமாக சட்டம்ஒன்றைஇயற்ற முனைந்தார்...

தப்பட்டதற்கு அரசிடம் நஷ்டஈடு கோரவேண்டும் என்றார்.

மற்றும் பண்டிதர் கந்தையா, திரு பொன்னம்பலம் உட்பட பலர் உரையாற்றினர்.

ஆலய முன்றலில் நடைபெற்ற கூட்டுப்பிரார்த்தனையைத் தொடர்ந்து திரு ஸி. சுந்தரலிங்கத்தின் தலைமையில் பக்தர்கள் மௌன ஊர்வலமாக வீதியைச் சுற்றிவந்தனர்.

# இவர்களுக்கு மட்டும் முதலில் தொலைபேசி வசதி

கோட்டை, ஞாயிறு

தொலைபேசிக்கு விண்ணப்பித்தவர்களில் நாட்டின் நலனுக்காகப் பயன்படுத்துபவர்களுக்கு மட்டுமே முதலில் தொலைபேசித் தொடர்பு வழங்கப்படவிருக்கிறது. இத்தகவலை தபால் தந்தித் தொடர்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தபால் தந்தித் தொடர்பு அமைச்சு, தொலைபேசி வசதி யார் யாருக்கு அவசரமாக வழங்கப்பட வேண்டும் என்பது பற்றி ஆராய்ந்த பின் இவ்வித முடிவுக்கு வந்துள்ளது.

அரசாங்கத்தின் விவசாய கைத்தொழில் கொள்கைகளை ஊக்குவிக்கும் திட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தொலைபேசி தொடர்பு வழங்குவதில் முதன்மையளிக்கப்படும். அடுத்து டாக்டர்கள், தனியார் மருத்துவ விடுதிகள், வைத்தியசாலைகள், உள்ளூராட்சி மன்றங்கள், மாநகரசபைகள், கிராமசபைகள், பட்டின, நகரசபைகள், அரசாங்க இலாகாக்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், புதினப் பத்திரிகைக் காரியாலயங்கள், பத்திரிகை ஆசிரியர்கள், முகாமையாளர்கள், பத்திரிகைக் காரியாலய நிருபர்கள், வங்கி அதிபர்கள் முதலியவர்களுக்கு வழங்கப்படும்.

தொழில் சம்பந்தமாக அமைக்கப்படாத தொலைபேசிகளைத் தொழில் அலுவல்களுக்குப் பாவிப்பது கண்டுபிடிக்கப்பட்டால், தொலைபேசித் தொடர்பைத் துண்டிப்பதற்குத் தபால்மா அதிபருக்குப் பூரண அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தபால் தந்தித் தொடர்பு அமைச்சர் திரு. குமாரசூரியர் தெரிவித்துள்ளார்.

— —

## பாதுகாப்பு நிதிக்கு ஒருநாள் சம்பளம்

தாவடி, ஞாயிறு

'தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆசிரியர்கள், நாட்டைக்காக்கும் நிதிக்குத் தங்கள் ஒரு நாள் சம்பளத்தை வழங்கியுள்ளனர்.

— —

## தெல்லிப்பழையில் பகற்கொள்ளை

மாவிட்டபுரம், ஞாயிறு

தெல்லிப்பழை யையடுத்த வீமன்காமப்பகுதியில் தினமும் பட்டப்பகலில் வீடுகளில் புகுந்துகொள்ளையடிக்கும் கோஷ்டி ஒன்று உலாவுவதாக காங்கேசன்துறை பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது.



# பாரிஸ் தமிழாராய்ச்சி மாநாடு முடிவுற்றது

## பிரதிநிதிகள் திரும்புகிறார்கள்

பாரிஸ், ஜூலை. 19

பிரஞ்சுத் தலைநகரான பாரிஸில் கடந்த நான்கு நாட்களாக நடைபெற்றுவந்த உலகத் தமிழாராய்ச்சி கருத்தரங்கு நேற்றுடன் முடிவடைந்தது

சுமார் 40நாடுகளிலிருந்து 200க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள். தமிழ் மொழியில் சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள மறு மலர்ச்சி பற்றியும், உலக நாடுகளுடன் தமிழ்...

...யும் ஒரு தொகை பணமும் தமிழ்நாடு அரசு கொடுத்துதவவிருக்கிறது.

பாரிஸில் நடைபெற்ற மாநாட்டை பிரஞ்சுக்காரரான தமிழ் அறிஞர் டாக்டர் பிலியோசா ஏற்பாடு செய்தார். மாநாட்டை தமிழ் நாடு முதல்வர் திரு. மு. கருணாநிதி ஆரம்பித்து வைத்தார். மேற்கு நாடுகளில்சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டுள்ள திரு. கருணாநிதி பாரிஸில் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை ஆரம்பித்து...

நிகழ்த்தினர்.

மாநாட்டை யுனெஸ்கோ ஸ்தாபனத்தின் பதில் டைரக்டர் திரு மால்கம் ஆதிசேஷையா திறந்து வைத்தார். அவர் தமிழ், ஆங்கிலம், பிரஞ்சு ஆகிய மும்மொழிகளிலும் பேசினர் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் இப்பொழுது தாயகம் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

# சந்திரனில் கால்வைத்து ஓராண்டு

நியுயோர்க், ஜூலை 19

# "அன்றைய நாடக உலகில் தரமான ரசிகர்களினல் நடிகன் முன்னேறினன்"

— கலையரசு

தாவடி, ஞாயிறு

'பாமர மக்களுக்கு இலகுவான முறையிலே சமய நெறிகளைப் பதியவைக்கும் நோக்[illegible]கவே ஆதியிலே நாடகங்கள் ஆரம்பிக்கப்பட்டன.' என தாவடி ஸ்ரீ கணேச [illegible] தாரின் நாடக... தலைமைதாங்கி உரைநிகழ்த்...

குறைகளை எடுத்து விளக்கும் ரசிகர்கள் இருந்தபடியால்தான் நடிகர்கள் நன்கு முன்னேற முடிந்தது: நடிகர்களும் பயபக்தியுடன் சிறப்பாக நடித்து புகழ் அடைந்தனர்.

நடிகன் ஒருவனுக்கு நாடகத்தைப் பொறுத்தவரை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

200க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள். தமிழ் மொழியில் சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள மறு மலர்ச்சி பற்றியும், உலக நாடுகளுடன் தமிழ் மொழிக்குள்ள உறவுகள் பற்றியும் இந்த மாநாட்டில் கட்டுரைகள் படிக்கப்பட்டன. இந்தக் கட்டுரைகள் மீது அறிஞர்கள் விவாதங்களும் நடத்திஞர்கள்.

சென்னையில் சர்வதேச தமிழாராய்ச்சிக் கழகம் ஒன்றை உருவாக்குவதற்கு ஐநாவின் கல்வி, விஞ்ஞான, கலாசாரஸ்தாபனத்தின் யுனெஸ்கோ) ஆதரவைக் கோருவதென்று தமிழாராய்ச்சி மாநாட்டின் உப குழுவொன்று முடிவு செய்தது இந்தக் கழகக் கட்டிடம் ஒன்று தமிழ் நாட்டில் நிறுவ பட விருக்கின்றது. இ ற் ான 40ஏக்கர் காணி

தமிழ் நாடு முதல்வர் திரு. மு. கருணநிதி ஆரம்பித்து வைத்தார். மேற்கு நாடுகளில்சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டுள்ள திரு. கருணநிதி பாரிஸில் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை ஆரம்பித்து வைப்பதற்காக லண்டனிலிருந்து அவசரமாக கடந்த 15ம் திகதி பாரிஸுக்கு வந்தார். கண்பரிசோதனைக்காக லண்டனில் டாக்டர்களுடன் ஆலோசனைகள் கலந்த பின்னர் அவர் பாரிஸ்வந்து மாநாட்டை ஆரம்பித்து வைத்துவிட்டு மீண்டும் திரும்பிச் சென்றார்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தமிழ் நாட்டிலிருந்து நிதி அமைச்சர் திரு. மதியழகன் தலைமையில் தூதுகோஷ்டியொன்று வந்திருந்தது புதுச்சேரி முதலமைச்சர் திரு. பரூக்மரைக்காயரும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரை

# அணுவைப்பிணைக்கும் ஆராய்ச்சியின்முன்னேற்றம்

நியுயோர்க், ஜுலை 19

அணுக்கள் இணைவதால் உண்டாகும் சக்தியை அடக்கியாள வேண்டுமென்று கடந்த 20 ஆண்டுகளாக உலகின் பல பகுதிகளிலும் விஞ்ஞானிகள் முயற்சி செய்துவருகிறார்கள்

கடல் நிறைய டியூட்டேரியம் என்னும் கனத்த ஹைட்ரஜன் ஏராளமாக இருக்கிறது இந்த மலிவான பொருளைக் கொண்டு ஏராளமாக மின்விசை உற்பத்திசெய்யலாம் என்பதுதான் இந்த ஆராய்ச்சியின் நோக்கமாகும்.

ஆராய்ச்சி ஆமை வேகத்தில்தான் முன்னேறி வருகிறது. கொடிய வெப்பநிலையிலுள்ள ஒரு வாயுவை ஒரு சிறிய இடத்தினுள் பிடித்து வைக்கவேண்டியிருப்பதுதான் முக்கிய முட்டுக்கட்டை, அந்த வாயு மின் ஏற்றமுள்ள துகள்களால் ஆனதாகும், இத் துகள்களோ ஒன்றையொன்று எதிர்த்து விலக்கும் இயல்பு வாய்ந்தவையாகும்

பிளாஸ்மா எனப்படும்இக் கொடிய வெப்பநிலை வாயு சாதாரணக் கொள்கலங்களையெல்லாம் உருக்கி ஆவியாக்கிவிடும் ஆகவே வெற்றறை ஒன்றின் நடுவே இந்தப் பிளாஸ்மாவை அந்தரத்தில் நிற்கும்படி செய்யக் காந்தமண்டலத்தைப் பயன்படுத்தலாமென்று ஆராய்ந்து சோதித்து வருகிறார்கள்.

ஆனல் பிளாஸ்மா வழியாக மின்விசைபாயத்தடையில்லை. இதனல் காந்தமண்டலம் சீராக இல்லையேல் பிளாஸ்மா நழுவிவிடும்.

இந்த இடையூற்றை வெல்வதற்கு இப்போது ஒரு புது வழி கண்டுபிடித்திருக்கிறார். அமெரிக்க விஞ்ஞானி ஒருவர். அணுப்பிணைப்பை அடக்கியாள இனி நடைமுறைக்கு உகந்த ஏற்பாடு உருவாவதற்கு இது பயன்படக்கூடும்.

டாக்டர் டிஹிரோ அச்சாவா, கலிஃபோர்னியாவில் சான்டியேபோ நகரில் கல்ஃப் ஜெனரல் அட்டாமிக் நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானி. இவர் தம் ஆய்வுக்கூடத்தில் பயன்படுத்தும் ஒரு கருவி பிளாஸ்மாவை ஒரே இடத்தில் 0 07 விநாடி நேரம் அப்படியே ஆடாமல் வைத்திருந்ததாகத் தெரிவிக்கிறார். இந்நேரம் இது போன்ற எந்தக் கருவியும் இதுவரை வைத்திருந்த அளவை விட 10 மடங்கு கூடுதலாகும்.

அணுப்பிணைப்பு உலைக்கு உலை கவளையங்கள் இருக்க முடியாது டாக்டர் அக்காவாவின் கருவியில் பிளாஸ்மாவே மின் ஓட்டத்தைத் தாங்கிக் காந்தமண்டலத்தையுருவாக்கும் ஊடமாக உள்ளது இது ஆய்வுக்கூட ஆராய்ச்சிக்கென்று அவர் உருவாக்கிய கருவி.

அடுத்தபடி செய்யவேண்டியது இதே போன்று பெரியதாகக் கருவி செய்து மின்விசை உற்பத்திக்குரிய அணுப்பிணைப்புக்கு வேண்டிய நிலைமைகளை உருவாக்க முடியுமா என்று காண்பதாகும்.

# காலவைத்து ஓராண்டு

நியுயோர்க், ஜுலை19

சந்திரனில் மனிதன் காலடிவைத்து நாளையுடன் ஓர் ஆண்டு பூர்த்தியாகின்றது.

1969 ஜுலை 20-ம் திகதி விண்வெளி வீரர் நீல்ஆம்ஸ்ட்ரோங் சந்திரத் தரையில் முதல் முதலாக காலடிவைத்தார்.

''விண்வெளி ஆராய்ச்சி இப்பொழுது நடைமுறை சாத்தியமாகிவிட்டது. மனித இனத்தின் எஞ்சிய காலவரலாறு முழுவதிலுமே இனி இந்த ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வரும்என்பது நிச்சயம்'' இவ்வாறு திரு. நீல்ஆம்ஸ்ட்ரோங்தமது சாதனைபற்றி நினைவு கூர்கையில் குறிப்பிட்டார்.

இன்று வாழ்ந்து கொண்டிருக்கும்மனிதர்களின் ஆயுள் காலத்துக்குள் மனிதன் சூரிய வட்டத்தின் மிகத் தொலைவிலிருக்கும் கிரகங்களுக் கெல்லாம் சென்றுவிருவான் என்று ஆம்ஸ்ட்ரோங் நம்பிக்கை தெரிவித்தார்.

# முள்ளியவளை சைவவித்தியாசாலை தெரிவு

முள்ளியவளை, ஞாயிறு

முல்லைத்தீவு வட்டார வித்தியாலயங்களின் நடன, நாடக, இசை விழாப் போட்டி இம்மாதம் 16ந் திகதி மாலை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அரங்கில் முல்லைத்தீவு வட்டாரக் கல்வியதிகாரி திரு. டபிள்யு. ஆர். அருளையா தலைமையில் நடைபெற்றபோது நாடகப்போட்டியில் முள்ளியவளை சைவ வித்தியாசாலையின் 'பாஞ்சாலி சபதம்' என்னும் நடகம் முதலிடத்தைப் பெற்று, திரு. ரி. தம்பையா ஜே பியினல் அன்பளிக்கப்பட்ட கேடயத்தைக் கைப்பற்றியது. பரதநாட்டியப் போட்டியிலும் முள்ளியவளை சைவ வித்தியாசாலை இரண்டாம் இடத்தைப் பெற்றுச் சான்றிதழ் பெற்றது இவ்விழாவில் வடமாநிலக் கல்வியதிபதி திரு வெ. சங்கரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்

நோக்கமாகவே ஆதியிலே நாடகங்கள் ஆரம்பிக்கப்பட்டன.' என தாவடி ஸ்ரீ கணேச நாடகமன்றத்தாரின் நாடகவிழாவிற்குத் தலைமைதாங்கி உரைநிகழ்த்துகையில் கலையரசு திரு. க. சொர்ணலிங்கம் கூறினர். அவர் மேலும் பேசும்போது:

'நாடக நடிகர்களைப் பொறுத்தவரை குருபக்தி மிக அவசியம் நடிகன் மேடையேறியதும் தன்னை மறந்து பாத்திரமாக ஒன்றிவிட வேண்டும். அதே வேளை தன்னையறியும் தன்மையும் இருக்க வேண்டும்: ஒரு நாடகத்தை மேடையேற்றுவதானல் அந்த நாடகத்தை நீண்ட நாட்களின் ஒத்திகைக்குப் பின்புமேடையேற்றினலே அது சிறப்பைக் கொடுக்கும் அன்றைய நாடக உலகிலே

அணுகுண்டு தயாரிக்க

# ரூ. 34,000 கோடி செலவு

பரோடா, ஜுலை19

ஓர் அணுக்குண்டு தயாரிக்க 34 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகிறது என டில்லி ராணுவ இலாகா ராஜாங்க அமைச்சர் திரு. என். எஸ். மகிதா அணுகுண்டு தயாரிப்பு பற்றி பத்திரிகை நிருபர்களுக்குக் கூறியபோது தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அவர் கருத்துத் தெரிவிக்கையில் அணுக்குண்டு தயாரிப்புக்கு 1962-ம் ஆண்டுசெலவானதிலும் பார்க்கதற்போது 2 மடங்கு செலவாகிறது. அணுகுண்டு தயாரிப்பது என்பது ஆடம்பரசெலவுதான் அணுகுண்டு தயாரிக்கத்தொடங்கினல் தேசத்தின்கல் விசுகாதாரம்விவசாயம் தொழில் ஆகியவற்றின் வளர்ச்சி பாதித்து விடும் என்று கூறினர்.

உலக இளைஞர்பற்றி

# இளவரசருடன் நிக்ஸன் வாதம்

நியுயோர்க் ஜுலை 19

பிரிட்டிஷ் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ், அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸனுடன் நேற்று சுமார் ஒரு மணிநேரத்துக்கு மேல் ஆலோசனைகள் நடத்தினர். உலக விவகாரங்கள் பற்றியும், இன்றைய உலக இளைஞர்களின் பிரச்னைகள் பற்றியும் இவர்கள் விவாதித்ததாகக் கூறப்படுகின்றது. இளவரசர் சார்ள்ஸின் வாதங்கள் அதியர் நிக்ஸனை மிகவும் கவர்ந்துவிட்டதாக ஓர் அதிகாரி கூறினர்.

யாலதான் நடிகர்கள் நன்கு முன்னேற முடிந்தது: நடிகர்களும் பயபக்தியுடன் சிறப்பாக நடித்து புகழ் அடைந்தனர்.

நடிகன் ஒருவனுக்கு நாடகத்தைப் பொறுத்தவரை சகலதும் தெரிந்திருத்தல் வேண்டும். காட்சியமைப்பு காட்சிக்கு ஏற்ற சீன் அமைப்பு இவற்றின்மூலம் இலகுவில் அக்காட்சி சம்பந்தமுடைய விஷயங்களை நடிகன் நினைவுறுத்திக் கொள்ள முடியும். ஒழுங்கும் ஒழுக்கமும் நடிகனுக்கு மிக அவசியம்.

கலைமணி எஸ். வடிவேலு, திருவாளர்கள்: கு. தம்பையா, சி. செல்வரத்தினம், வி. இராசசிங்கம் ஆகியோருட்படப் பலர் உரையாற்றினர்.

# ஒரு வித்தில் ஆறு கிளைத் தென்னை

உருத்திரபுரம், ஞாயிறு

ஒரு தேங்காய் வித்தில் இருந்து ஆறு தென்னைகள் கிளைகளாகப் பிரிந்து வளர்ந்துள்ளன.

ஒன்றரை அடி உயரம் வரை வளர்ந்துள்ள இந்தத் தென்னம்பிள்ளை உருத்திரபுரத்தைச் சேர்ந்த க. தருமலிங்கம் என்பவரின் வளவில் வளர்ந்துள்ளது. இந்தத் தென்னம்பிள்ளையைப் பார்வையிட்ட ஊரவர்கள் அதற்கு கற்பூரம் கொளுத்தி வழிபாடு செய்கிறார்கள்.

# தியானம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இளவாலை புனித யாகப்பர் திருநாளையிட்டு மேற்படி பங்கு மக்களுக்கு நவநாட்களுடன் தியானமும் நடைபெற்று வருகிறது. பண்டத்தரிப்புக் கட்டளைக்குரவர் வண. இராசகாரியர் தியானபோதகம் செய்து வருகின்றார். ஆலயக் கட்டளைக்குரவர் வண டெய்சி ஆராதனை நடாத்தி வருகிறார்,

இளவாலை


# முதியோர் கல்விநிலையம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இளவாலை மகாவித்தியாலயம் முதியோர் கல்விநிலையத்தில் கைத்தொழில், வர்ணந்தீட்டல், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் பாடசாலை நேரத்தின் பின் கற்பிக்கப்படுகின்றன மூன்று ஆசிரியர்களால் நடத்தப்படும் இவ்வகுப்புகளில் சுமார் 115 பேர் பயில்கின்றனர்.

குழுவை நியமித்தார். அது நாடெங்கும் வாக்குமூலங்களைப் பெற்று பிரதமரிடம் சமர்ப்பித்தபோது திரு. சேனநாயக்கா இதுசம்பந்தமாக சட்டம்ஒன்றைஇயற்ற முனைந்தார். அப்போது திரு. ஸி. சுந்தரலிங்கம் கீரிமலையில் சைவப் பிரமுகர்களைக் கூட்டி ஆராய்ந்து சமயத்துக்கு சட்டம் இயற்றுவது அநீதியான செயல் என்று அரசாங்கத்திடம் வற்புறுத்தியதைத் தொடர்ந்து சட்டம் இயற்றுவது கைவிடப்பட்டது.''

மு: திடவீரசிங்கம் பேசுகையில்: உற்சவம் நிறுத்



வல்வெட்டித்துறை வைத்தீஸ்வரர் தேர்த்திருவிழாவின் போது சுவாமி வீதிவலம் வரும் காட்சி







புதிய, பாரமற்ற

ஹேஸ்ப்ரே 350 பீ.டீ.

தட்டி விட்டதும் இயங்கும் சுலபமான விசையுடைய பீச்சு முனை கொண்டது.

பீச்சு முனையில் தட்டிவிட்ட மாத்திரத்தில் இயங்கும் புதிய தடுப்பு விசை உள்ளதால் வெளியே சிவிறப்படும் மருந்தின் அமுக்கத்தை குறைந்த அளவிலிருந்து கூடுதலான அளவுக்குக் கட்டுப்படுத்த ஏதுவாகிறது. இது விசேஷமாக தேயிலையில், பயிர்களுக்குச் சேதம் விளையும் என்ற பயமில்லாமல் களைக் கொல்லிகளை தெளிக்கப் பயன்படுகிறது.

அமுங்கிப் போகாத, துருதடுப்புப் பிளாஸ்டிக்கினல் ஆன 3½ கலன் தாங்கி சௌகரியத்திற்கும் சுலபமாக இயக்குவதற்கும் என்றே உருவானது. பம்பைப் பராமரிக்கத் தேவையில்லை. தொடர்ந்து உச்ச அமுக்கத்தை நிலைபெறச் செய்யலாம்.

உதிரிப்பாகங்கள் எப்போதும் கிடைக்கும்.

VISION 75/70

HAYLEYS

தயாரிப்பேர்ர்:

ஹேலீஸ் லிமிட்

400, டீன்ஸ் ரோட,

கொழும்பு 10.

தொலைபேசி:

96331


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

தேவைகளை அதிகரித்துக்கொண்டே செல்வது நாகரிகமல்ல. தானே விரும்பி தேவைகளைக் குறைத்துக்கொள்ளவேண்டும். — மகாத்மாகாந்தி.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம் 4-ந் திகதி (20-7-70)

## தடுப்பு நடவடிக்கை

சட்டவிரோதக் குடியேற்றத்தையும் கள்ளக்கடத்தலையும் தடுப்பதற்கு இந்திய அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் கூட்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வடபகுதிக்குச் சமீபத்தில் வந்து திரும்பிய பாதுகாப்பு வெளிவிவகார உதவிஅமைச்சர் அரசாங்கத்துக்கு யோசனை கூறியிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. கள்ளக்கடத்தலையும் சட்டவிரோதக் குடியேற்றத்தையும் தடுப்பதற்கு இலங்கையும் இந்தியாவும் கூட்டாக முயற்சிசெய்யவேண்டுமென்றும் இந்த முயற்சி நிச்சயம் பயனளிக்குமென்றும் நாம் இந்தப் பத்தியில் பல தடவைகளிலும் வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

இலங்கைக்கு சட்டவிரோதமாக இந்தியாவிலிருந்து குடியேறுபவர்களின் தொகை வெகுவாகக் குறைந்திருக்கிறதென்று நமது அரசாங்க அதிகாரிகளே ஒப்புக்கொண்டிருக்கின்றனர். சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதற்கு தமிழ்நாட்டு அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு அதில் ஓரளவு வெற்றியும் கண்டிருக்கின்றது. சட்டவிரோதமாக இங்கு குடியேறுவதற்கு முயற்சி செய்பவர்களைக் கண்டுபிடித்து தமிழ்நாடு அரசாங்கம் தண்டனையும் வழங்கிவருகிறது. இதற்கு முன்னர் இலங்கை - இந்திய அரசாங்கங்கள் எடுத்த கூட்டுமுயற்சியின் பயனாகவே சட்டவிரோதக் குடியேற்றம் வெகுவாகக் குறைந்திருக்கிறதென்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும்.

சட்டவிரோதக் குடியேற்றமும் கள்ளக்கடத்தலும் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில்தான் நடைபெறுகின்ற சம்வங்களல்ல; பிரிட்டனிலும் மற்றும் பல நாடுகளிலும் இது ஒரு பிரச்னையாகவே இருந்து வருகின்றது. இந்தப் பிரச்னைகளை ஒழிப்பதற்கு பல நாடுகளும் முயற்சிசெய்து வருகின்றன. கள்ளக்கடத்தல் வடபகுதிக் கரையோரங்கள் மூலம்தான் நடைபெறுகின்றனவென்றும் சட்டவிரோதக்குடியேற்றத்துக்கும் வடபகுதிதான் கேந்திரஸ்தானமாக விளங்குகிறதென்றும் அரசியல் மற்றும் காரணங்களைக் கொண்டு சிலர் தவறான அபிப்பிராயத்தை இங்கு உருவாக்கி இருக்கின்றனர்

கொழும்புத் துறைமுகம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கள்ளக்கடத்தலும் சட்டவிரோதக்குடியேற்றமும் நடைபெற்று வருகின்றனவென்பது அரசாங்க அதிகாரிகள் தெரிவிக்கும் தகவல்களிலிருந்தும் வெளியாகும் செய்திகளிலிருந்தும் தெளிவாகிறது.

சட்டவிரோதக் குடியேற்றத்தையும் கள்ளக்கடத்தலையும் தமிழ்மக்கள் ஆதரிக்கவில்லை; வடபகுதியில் வாழும் மக்கள் மீது இந்தப் பழியைச் சுமத்தி நாட்டில் உள்ள சில பெரும் சக்திகள் இவற்றுக்குப் பின்னணியில் இயங்குகின்றனவென்பதை ஆட்சிமன்றத்தில் கூட சிலர் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

சட்டவிரோதக் குடியேற்றம் கள்ளக்கடத்தல் ஆகியவற்றைத் தடுப்பதற்கு இந்திய அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் கூட்டாக நடவடிக்கை மேற்கொள்வதுடன் இங்கு இந்த தேசத்துரோக நடவடிக்கைகளுக்குப் பின்னணியாக இயங்கும் சக்திகளையும் கண்டுபிடித்து அவற்றின் மீதும் சரியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமையும் பொறுப்புமாகும்.

## பரந்தன் கொலை வழக்கில் எதிரிக்கு 3 வருட சிறை

# "நவீன மார்க்கட் வேலைகள் தாமதமானதற்கு யாழ். மாநகரசபையே காரணம்"

## 'மைற்' ஸ்தாபனத் தலைவர் கூறுகிறார்

(நமது நிருபர் கா. யோகநாதன்)

யாழ்ப்பாணம், ஞாயிறு

'யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்டுவரும் நவீன மார்க்கட் வேலைகள் தாமதமானதற்கு யாழ்ப்பாணம் மாநகர சபைதான் காரணம். ஒவ்வொரு மாதமும், தரவேண்டிய பணத்தைத் தாமதமின்றி ஒழுங்காகத் தந்திருந்தால் வேலைகளைக் குறிப்பிட்ட காலத்தில் முடிப்பதற்குத் தடை ஏதும் இருந்திருக்காது. கடைக்காரரை அப்பகுதியிலிருந்து வெளியேற்ற மாநகர சபைக்கு மூன்று மாதம் முதல் ஏழு மாதம் வரை பிடித்தது. வேலைத்தலத்திற்குக் குறுக்கால் சென்ற தொலைபேசி மின்சார கம்பிகளை அகற்றுவதற்கு மாநகரசபைக்கு எட்டு மாதம் பிடித்தது. தண்ணீர் தொட்டியை உடைப்பதற்கு சபைக்கு எட்டு மாதம் எடுத்தது. பணத்தை மாநகரசபை ஒழுங்காகத்தரவில்லை. இந்த நிலையில் குறிப்பிட்டகாலத்தில் வேலைகளை முடிப்பது சந்தேகம்'

யாழ்ப்பாணம் நவீன மார்க்கெட் ஒப்பந்தக் காரரான 'மைற்' ஸ்தாபனத்தின் தலைவர் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா நேற்று நமது நிருபருக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. மகாதேவா மேலும் கூறியதாவது:-

மாநகரசபை பூரண ஒத்துழைப்புத் தந்திருந்தால், குறிப்பிட்ட காலத்தில் கட்டிமுடித்திருப்போம். வேலைகள் தாமதமாவதைத் தவிர்க்க இரவில் வேலை செய்யவிரும்பினோம் இதற்கு மாநகரசபை அனுமதி வழங்கவில்லை.

நில வேலைகளைச் செய்ய வேண்டாமென்று மாநகர சபை தடைபோட்டது. நாங்கள் அத்திபாரம் போட்டு கப்புகள், சுவர் கட்டியபின் கூரையைப் போடாமல் நிலவேலைகளை ஆரம்பித்தோம். இதற்குக் காரணமிருந்தது. கன்கிறீட்டில் முட்டுக்கொடுத்தால் ஒரு சதுர அங்குலத்திற்கு 800 றுத்தல் தாங்கும் சாதாரண நிலத்தில் முட்டுக்கொடுத்தால் 30 றுத்தலை மட்டுமே தாங்கும். மழை பெய்தால் 10 றுத்தலை மட்டுமே தாங்கும்.

அவர் பல கஷ்டத்திற்கும் மத்தியில் பூரண ஒத்துழைப்புத் தந்தார், பணத்தைக் கூடியளவு தாமதிக்காமல் தந்துகொண்டிதார், அதனால் வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தது

சாதாரணமாக இப்படிப்பட்ட தடைகள் வந்தால், ஒரு வருடம் மேலும் அவகாசம் வழங்குவார்கள். நமது ஒப்பந்தப்படி இவ்வருடம் நவம்பர் 11-ம் திகதி நவீன மார்க்கெட் வேலைகள் எல்லாம் முடிய வேண்டும்.

மழைபெய்த காரணத்தினாலும் அத்திபாரத்தை 3 தரம் போடவேண்டியிருந்தது. உள்வேலைகளெல்லாம் முடிவடைந்துவிட்டன. கூரைகள் மட்டுமே போடப்படவேண்டும். வெளிவேலைகளில் இருபக்கமும் மாடிகள் கட்டவேண்டும். ஒரு பக்கத்தில் 25 அடி உயரம் சுவர் கட்டப்பட்டுவிட்டது. மறுபக்கத்தில் 14 அடி உயரம் சுவர் கட்டப்பட்டுவிட்டது. தற்போதுள்ள நிலையில் குறிப்பிட்ட காலத்தில் வேலை முடிவது சந்தேகமாயிருக்கிறது.

இன்றுவரை 6 லட்சம் ரூபாவிற்கு வேலைகள் நடந்...

...னங்கள், கழிவு நஷ்டம், சம்பளம், கந்தோர் சாதனம், ஆகிய வற்றிற்கு நாம் முன்பணம் செலுத்தியிருக்கிறோம். இதுவரை சுமார் 7 லட்சமவரை செலவழித்திருக்கிறோம் இதில்போட்ட பணத்தை எடுத்து விட முடியுமா? என்று பயம் இருக்கிறது. எங்கள் பணத்தை நவீன மார்க்கட்டுக்கு, செலவழித்து விட்டு அதை திருப்பி எடுக்க பெருதும் கஷ்டப்படுகிறோம். மாநகரசபை இதையிட்டு அக்கறை காட்டவில்லை.

நாங்கள் போட்ட பணம் முழுவதையும் உடனே கேட்க முடியாது. அதற்கு முறை இருக்கிறது. வேலைகள் முடிந்துதான் கேட்க வேண்டும். நாங்கள் கேட்டபணம் இன்னும் சபை தரவேண்டியிருக்கிறது.

நவீனமார்க்கட் 3 கட்டடங்களும், ஒப்பந்தப்படி 13,98,449 ரூபா நமக்கு தரவேண்டும். குறைத்துக் கூட கிடைக்கலாம். ஏனெனில் சில வேலைகளை விடச் சொன்னால் விடவேண்டும்.

ஒப்பந்தத்தை ரத்தாக்க வேண்டுமானால் அதற்கு தகுந்த காரணம் இருக்கவேண்டும். ஒருமாதப்பணம் இரண்டரை மாதம் கழித்தே நமக்கு கிடைத்திருக்கிறது. இந்த நிலையில் தாங்கள் ஒப்பந்தத்தை ரத்தாக்கியிருக்கலாம். ஆனால், யாழ்ப்பாண மக்களுக்கு இப்பணியை செய்ய வேண்டுமென்பதற்காகவே, தொடர்ந்து பல கஷ்டங்கள் மத்தியில் செய்து வருகிறோம். மார்க்கட்டில் புதிய வேலைகளை செய்யச் சொல்லுவர்கள். அதற்கு பணம் பல மாதம் தாமதித்தே கிடைக்கும். இதற்கு சபையின் அனுமதி பெற வேண்டும்.

20,000 கற்கள் அறுத்து வைக்கப்பட்டிருக்கிறது. வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது



எமது கேள்வியின்படி யாழ்ப்பாண மக்களுக்கு சுமார் 10 லட்சம் ரூபா மிச்சமாக கிடைத்திருக்கிறது. நாங்கள் சுமார் 13 லட்சம் கேட்டோம். மற்ற ஸ்தாபனம் சுமார் 24 லட்சம் கேட்டது. வேறொரு ஸ்தாபனம் 35 லட்சம் கேட்டது. நாம் மிகக் குறைவாகவே கேட்டோம். அப்படியிருந்தும் நமக்கு சபையின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கவில்லை.

மாநகரசபையிடமிருந்து நாம் பெற்றுவந்த பணம் மாதம், மாதம் குறைந்து கொண்டே வந்தது,

இந்த நிலையில் நாம்எமது சொந்தப் பணத்தை போட்டு வேலைகளை முடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. யாழ்ப்பாண மக்கள் இவற்றை அறிந்து கொள்ள வேண்டுமென்பதே எனது விருப்பமாகும்.

## வெளிநாட்டு ராஜதந்திரிகள் தாக்கப்பட்டனர்

### தோட்டப்பகுதியில் சம்பவம்

கோட்டை, ஞாயிறு

உல்லாசப் பிரயாணத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகள் எட்டுப்பேர் வேலைநிறுத்தக்காரரால் தாக்கப்பட்டனர். அப்புத்தளை பொலிஸ்பகுதியைச் சேர்ந்த உடாவேரிய தோட்டத்திலிருந்து இச் சம்பவம் அறிவிக்கப்படுகிறது.

உல்லாசப் பிரயாணத்தை மேற்கொண்டு இங்குவந்துள்ள இவர்கள் அப்புத்தளைப் பகுதிக்கு ஜீப்புகளில் சென்றதாகவும் குறிப்பிட்ட தோட்டம் ஒன்றை பார்வையிடுவதற்காக இவர்கள் சென்றுகொண்டிருந்த போது அங்கு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் ராஜதந்திரிகள் சென்ற ஜீப்பை மறித்துத் தாக்கியதாகவும் கூறப்படுகிறது.

தாக்கப்பட்டவர்களில் அறுவர் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ராஜதந்திர வட்டாரங்களைச் சேர்ந்தவர்கள். இச்சம்பவத்தின்போது ஒரு பெண் உட்பட மூவர் காயமடைந்தனர். இது சம்பந்தமாக 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

— —

### தாக்குண்டார்

கோட்டை, ஞாயிறு

இரு வயதானவர்களுக்கும் சிறுவன் ஒருவனுக்குமிடையே ஏற்பட்ட சண்டையை சமரசம் செய்யச் சென்ற அரசியல் வாதி ஒருவர் தாக்கப்பட்டார்.

கொழும்பு மோதரையிலுள்ள அழுத்மாவத்தையைச் சேர்ந்த லங்காசமசமாஜக்கட்சியைச் சேர்ந்த அரசியல் வாதியே இவ்வாறு தாக்கப்பட்டவராவர்.

— —

### பதுளைக் காட்டில் பெண்ணின் பிரேதம்

கோட்டை, ஞாயிறு

பதுளைப் பகுதிக் கண்மையிலுள்ள காட்டில் ஒரு பெண்ணின் பிரேதம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதுசம்பந்தப்பட்டமரண விசாரணையில் சியபாத்து என்பவர் அந்தச் சடலம் தனது மனைவி லொக்குமெனிக்காவினுடையது என்று தெரிவித்துள்ளார்.

தனது மனைவிக்கும் மகன் முறையுள்ள ஒருவருக்குமிடையே உறவிருப்பதாக ஊரார் கதை கட்டிவிட்டதாகவும் இந்த அவமானத்தின் காரணமாகவே அவர் தற்கொலை செய்திருக்கலாமென்று தாம் நம்புவதாகவும் இறந்தவரின் கணவர் சாட்சியமளித்தபோது கூறினர்.

### 40 ஆண்டு ஆசிரியப் பணி

எதிர்காலச் சிற்பிகளான சிறுவர்களை உருவாக்கும் கல்விப் பணியில் 39 ஆண்டுகள் ஈடுபட்டுள்ளவர் திரு நாகநாதி சோமசுந்தரம்.

புங்குடுதீவை தாயகமாகக்கொண்டவரான திரு. சோமசுந்தரம் மிக இளமைக்காலத்திலேயே ஆசிரியப்பணி புரியத் தொடங்கியவர். ஆரம்பகாலத்தில் சரவணை இந்து பாடசாலையில் உதவி ஆசிரியராகப் புகுந்த இவர் புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாசாலையின் தலைமையாசிரியராயிருந்து இம்மாதத்துடன் ஓய்வு பெறுகின்றார்.

நயினை நாகபூஷணி வித்தியாசாலை, அனலைதீவு சதாசிவ மகாவித்தியாசாலையிலும் இவர் பணியாற்றியுள்ளார். ஏறக்குறைய 35 ஆண்டுகள் இவர் தலைமையாசிரியராக பணிபுரிந்துள்ளார். தீவுப்பகுதிகளின் சமுக நலன்களுக்கு இவர் தொண்டாற்றியவர், மாணவர்களாலும் பெற்றோர்களாலும் பராட்டப்பெற்ற பண்பாளரா்கவும் இவர் திகழ்ந்துள்ளார்.

# வடபகுதி பழவகைக்கு தெற்கில் கிராக்கி!

## ருத். 55 லட்சம் விற்பனவு இலாகா கொள்வனவு

யாழ்ப்பாணம், திங்கள் வாங்கி கொழும்பு திரிப் ... யில் கொள்வனவு செய்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...பாட்டனிலும் மற்றும் பல கடமையும் பொறுப்புமாகும்.

# பரந்தன் கொலை வழக்கில் எதிரிக்கு 3 வருட சிறை

யாழ்ப்பாணம், ஞாயிறு

பரந்தன் கொலைவழக்கில் எதிரிக்கு 3 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இவ் வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏ. எல். சிறிமானே முன்னிலையில் விசாரணை செய்யப் பட்டது.

எதிரி கைமோசக் கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பு வழங்கினார்.

இவ் வழக்கில், பரந்தனில் 69-ம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் தேதி வைத்தி மருதன் என்பவர் வீரகத்தி தருமன் என்பவரை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. எதிரிக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் டபிள்யூ. எஸ். செந்தில்நாதன் நியமிக்கப்பட்டிருந்தார்.

அசைஸ் விசாரணை இன்று காலை வரை ஒத்தி போடப் பட்டுள்ளது.

## மாவை ஆலய....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

குள் சென்றவர்கள் கம்யூனிஸ்ட் சின்னங்களை வரைந்துள்ளதாகவும் பொலிசாரின் அத்துமீறிய செயல்களினால் ஆலய உற்சவம் நடைபெறாமல் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இவற்றை அனுதாபத்தோடு கேட்ட அமைச்சர் பொலிசாரின் நடவடிக்கை குறித்து கவலை தெரிவித்தார். அதுவிடயமாக பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவுக்கும் பொலிஸ் அதிபருக்கும் எடுத்துச் சொல்லி, திரும்பவும் இம்மாதம் 21-ந் திகதி 9 மணிக்கு வருவதாகக் கூறியதோடு பொலிசாரை ஆலயத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்

இப் பேச்சுவார்த்தையின் போது மாவை ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ துரைச்சாமிக் குருக்கள் பிரம்மஸ்ரீ பாலசுந்தரக் குருக்கள் ஆலய நிர்வாகி திரு ஸி, சுந்தரலிங்கம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வடபிரதேசக்கிளை அமைப்பாளர் திரு எம், துரைராசா, எம் நடராசா உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் என், டி என், சில்வா இன்ஸ்பெக்டர் வராக்கொட ஆகியோரும் கலந்துகொண்டனர் இப் பேச்சுவார்த்தையின்பின பிரம்மஸ்ரீ துரைச்சாமிக் குருக்களுடன் தனியாக உதவியமைச்சர் பேச்சுவார்த்தைநடத்தினார்,

## மரண விசாரணைக்குழு

கோட்டை, ஞாயிறு

தொடம்பே முதலாளியின் மரணம்பற்றி விசாரிப்பதற்கென கமிஷன் ஒன்று நியமிக்கப்படவிருக்கிறது.

1966-ம் ஆண்டுச் சதியில் தொடம்பே முதலாளி சம்பந்தப்பட்டவராகக் கருதப்பட்டவர் விசாரணைக்கமிஷனில் இடம்பெறுவோர்களின் பெயர்கள் பிரதமரின் பரிசீலனையிலுள்ளன.

## மரண அறிவித்தல்

**திருமதி மரியாம்பிள்ளை கத்தரின்**

சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி மரியாம்பிள்ளை கத்தரின் காலமாகிவிட்டார். இவர் திரு மரியாம்பிள்ளையின் அருமை மனைவியும் திரு. அருளானந்தம், திரு. வெலிச்சோர் ஆபரணம், திருமதி சூசைப்பிள்ளை மார்கறேற், திருமதி ஜோர்ஜ் ஞானமலர், திருமதி ஞானப்பிரகாசம் மரியநாயகம் ஆகியோரின் அருமைத் தாயாரும் திரு அகஸ்ரின் சூசைப்பிள்ளை, டாக்டர் ஜோர்ஜ் திரு ஜேசேப்பு ஞானப்பிரகாசம், டாக்டர் எட்வேட் திருமதி அருளானந்தம் அமலோற்பவம், திருமதி மோனிக்கா ஆபரணம், திருமதி போல் வில்வீரோஸ் ஆகியோரின் மாமியாரும் வண பிதா யஸ்தஸ் சின்னப்பு (O S.B) அவர்களின் சிறியதாயாரும் ஆவர். அன்னாரின் பூதவுடல் இன்று மாலை (20-7-70) 4 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து சுன்னாகம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்

2132

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஒரு சதுர அங்குலத்திற்கு 800 ரூத்தல் தாங்கும் சாதாரண நிலத்தில் முட்டுக்கொடுத்தால் 30 ரூத்தலை மட்டுமே தாங்கும். மழை பெய்தால் 10 ரூத்தலை மட்டுமே தாங்கும்.

கட்டிடத்திற்கும் வேலை குமிடையில் 2 அடி இடைவெளிதானுண்டு. குறுகிய வேலைத்தளமாகையால் கல்லு அறுப்பதற்கு இடவசதியில்லை. அதற்காக நிலத்திற்குச் சீமெந்து போட்டோம். இதற்கு மாநகரசபை தடைவிதித்துவிட்டது குட்டிக்கு நிலம் வெடித்துவிடும் என்று கூறிவிட்டார்கள். நிலத்தில் ஓரிடம்கூட குட்டிக்குள் வெடிக்கவில்லை. குட்டிக்காரத்தான் விரிவுப் பிணைப்பு போடப்பட்டிருக்கிறது.

முன்னாள் மேயர் காலத்தில் 3 லட்சம் ரூபாவிற்கு வேலைகள் நடந்தது, மூன்றில் இரண்டு பங்கு சுவர்கள் கட்டிமுடிக்கப்பட்டது.

சுவர் கட்டப்பட்டுவிட்டது. தற்போதுள்ள நிலையில் குறிப்பிட்ட காலத்தில் வேலை முடியும் என்பது சந்தேகமாயிருக்கிறது.

இன்றுவரை 6 லட்சம் ரூபாவிற்கு வேலைகள் நடந்திருக்கிறது. மாநகரசபை 3,40,780 ரூபா 28 சதம் மட்டுமே தந்திருக்கிறது. 37,856 ரூபா 58 சதம் சபை தரவேண்டியபணம். பிடிப்புப்பணமாக வைத்திருக்கிறது. செய்தவேலைகளில் பிழையேற்பட்டால் அல்லது அரைவாசியில் வேலைகளை விட்டுச்சென்றால் இப்பிடிப்புப்பணத்திலிருந்து அறவிடப்படும். இதுவரை 3,79,565 ரூபா 86 சதத்திற்கு சபை கணக்கெடுத்துள்ளது

திரு மகாதேவா மேலும் கூறியதாவது: கலக்கும் யந்திரம், குலுக்கும் யந்திரம், தற்காகலி சீமெந்து வேலைகள, பலகைகள ஒட்டுகள, அளவு சாதனங்கள், வாக

... இதற்கு சபையின் அனுமதி பெற வேண்டும்.

20,000 கற்கள் அறுத்து வைக்கப்பட்டிருக்கிறது. வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது இதைப்பார்க்கும் போது சிலர், நவம்பருக்குமுன்வேலைகள் முடிந்து விடுமோ என்று கருதுகிறார்கள்.

20 அடி, 15 அடிகளைக் கொண்ட 54 பெரிய கடைகளும், 9 அடி, 9 அடிகளைக் கொண்ட 72 சிறிய கடைகளும் மட்டுமே தற்போது நவீனமார்க்கட்டில் அடங்கியிருக்கும்.

மீன்சந்தை பக்கமும், பழக்கடைப் பக்கமும், மேலும் மிகுதியான கட்டடங்கள்கட்டப்படவிருக்கின்றன. இக் கட்டடவேலைகளை நாங்கள் ஏற்பதுசந்தேகமே. தற்போது நாங்கள்படும் கஷ்டத்தை தொடர்ந்து அனுபவிக்க விரும்பவில்லை. அக் கட்டட வேலைகளுக்கு கேள்வி கேட்போமோ தெரியாது.

# 'மார்க்கட்' வேலைகளை மக்கள் பார்வையிட்டனர்

(நமது நிருபர் கு. வி. மகாலிங்கம்)

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் வேலைகளில் மூன்றில் இரண்டுபங்கு வேலைகள் முடிந்திருப்பதை காணகூடியதாகஇருந்தது. பொதுமக்களும், பத்திரிகை நிருபர்களும், நேற்று நவீன மார்க்கட் வேலைகளை பார்வையிட்டார்கள். பொதுமக்கள் பார்வைக்கு நேற்றுமுதல் தடவையாக அனுமதிக்கப்பட்டது.

நவீன மார்க்கட்டின் நுழைவாயிலில் சித்திர வேலைப்பாடுகள் கொண்ட தூண்கள் கட்டப்பட்டுள்ளது. மார்க்கட் பூரணமாக கட்டிமுடிக்கப்பட்டால் 1000 தூண்கள் இடம்பெறுமென தெரிவிக்கப்பட்டது.

54 பெரிய அறைகளும், 72 சிறிய அறைகளும் கொண்ட கட்டடவேலைகள் இவ்வருடம் நவம்பர் மாதத்திற்குமுன்முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டடஒப்பந்த காரரான மைற் ஸ்தாபன தலைவர் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா, நேற்று கட்டட வேலைகளை யாழ். வரியிறுப்பாளர்களுக்கு சுற்றிக்காண்பித்தார்.

கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதியை இணைக்கும் வகையில் கட்டட வேலைகள் அமைந்துள்ளன. அதனால் வாகனப் போக்குவரத்து நடைபெறும் என அறியப்படுகிறது.

ஆஸ்பத்திரிவீதி பக்கமும், மின்சார நிலைய வீதிப்பக்கமும், நவீனவேலைப்பாடுகள் கொண்ட இருமாடிக் கட்டடங்கள் அமையும். உள்பக்கம் சாதாரண கட்டடமாகவே அமையும்.

ஆஸ்பத்திரி வீதிப் பக்க மேல்மாடிவேலைகள் ஆரம்பமாகிவிட்டன. அப்பக்கத்தில் 25 அடி வரை சுவரி எழுந்துள்ளது. மற்றப்பகுதிகளில் 14 அடிவரை எழுந்துள்ளது.

இந்த நவீன மார்க்கட்டில் சகல பொருட்களையும் விற்கவும், வாங்கவும் வசதிசெய்யப்படும். சென்னையில் உள்ள 'சுப்பர் மார்க்கட்' போல், இங்குகுடும்பத்திற்கு தேவையான சகல பொருட்களையும் பெற்றுக்கொள்ள முடியும். இங்கு கிராமப்புற மக்களது சுதேசிய உற்பத்தி பொருட்களும் விற்பனை செய்யப்படுமாம். வெளிநாட்டுப் பொருட்களும் இங்குபெறமுடியும்.

பூரண நவீனமார்க்கட்டில் 3 சிறிய கட்டட வேலைகள் மட்டும்தான் தற்போது நடைபெற்று வருகிறது. இரண்டாவது கட்டட வேலைகள் இதன் பின்னரே ஆரம்பிக்கப்படும். மீன்சந்தை பழக்கடை ஆகியன அடங்கியதாக இரண்டாவது கட்ட வேலைகள் அமையும் நவீன மார்க்கட் வேலைகள் விரைவில் முடியவேண்டுமென யாழ். மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

# தெற்கில் கிராக்கி!

## ரூத். 55 லட்சம் விற்பனவு இலாகா கொள்வனவு

யாழ்ப்பாணம், திங்கள்

வடபகுதிப் பழவகையில் அரசாங்கவிற்பனவுப்பகுதியில் அதிக செல்வாக்கு நிலவிவருகிறது. வடபகுதி விற்பனவு இலாகா வடக்கில் கொள்முதல் செய்துள்ள பழவகைகளின் தொகையைக் கொண்டு இதனை அறியக்கூடியதாயிருக்கிறது.

கடந்த நிதி ஆண்டில் யாழ்ப்பாணம் விற்பனை இலாகா 55 லட்சம் ரூத்தல் பழவகைகளைக் கொள்முதல் செய்துள்ளதாக அதன் புள்ளிவிபரம் தெரிவிக்கிறது.

குறிப்பாக நீர்வேலி வாழைக்குலையை விற்பனவுப்பகுதி அதிக விருப்பத்துடன் வாங்குகிறதாம், மாதமொன்றுக்கு சுமார் 3000 வாழைக்குலைகளை யாழ். விற்பனைப் பகுதி வாங்கி கொழும்பு திரிப்போலி மார்க்கட்டுக்கு அனுப்பிவைக்கிறது. நீர்வேலி வாழைப்பழமே அதிக சுவையுடையதாகக் கருதப்படுவதாகவும் இவற்றுக்குத் தெற்கில் அதிக மதிப்பு நிலவுவதாகவும் தெரியவருகிறது. இது போன்று யாழ்ப்பாணத்துத் தக்காளிப் பழத்துக்கும் தெற்கில் மதிப்பு நிலவுகிறதாம்.

மாதமொன்றுக்கு 45 லட்சம் ரூத்தல் தக்காளியைமார்க்கட்டிங் இலாகா கொள்வனவு செய்து ஜாம் முதலியன தயாரிப்பதற்காக தெற்கிலுள்ள தொழிற்சாலைக்கு அனுப்பிவருகிறது.

இவைதவிர யாழ் விற்பனைப்பகுதி மாதமொன்றுக்கு சுமார் 19 லட்சம் ரூத்தல் காய்கறிவகைகளையும் 3 முட்டைகளையும் வடபகுதியில் கொள்வனவு செய்வதாயும் அந்தப் புள்ளிவிபரம் கூறுகிறது.

பழவகை காய்கறிவகைகளையும் யாழ் விற்பனவுப் பகுதி வடபகுதியில் கொள்வனவு செய்து தெற்குக்கு ஏற்றுமதி செய்வதுடன் உள்ளூர்பாவனையாளர்களுக்கும் இவைகுறைந்த விலையில்கிடைக்கவழி செய்துள்ளதாகவும் யாழ்ப்பாண நகரிலும்மற்றும் சுன்னாகம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, பருத்தித்துறை கிளிநொச்சி முதலிய இடங்களிலுள்ள விற்பனவுப் பகுதிக்கடைகள் மூலம் உள்ளூர் பாவனையாளர்களுக்கு நிதான விலையில் பொருட்கள் கிடைக்கவிற்பனவு இலாகா வழி செய்துள்ளதாகவும் இலாகா அதிகாரி ஒருவர் சொன்னார். (கு. வி. ம.)

# மனிதன் எப்போது தோற்றினான்?

— ஏ. ஸ்வாட்வர் —

மன்பதையியலில் உருவத்தோற்றத்தை ஆராயும் விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாகவே மனிதன் எப்போது தோன்றினான் என்ற கேள்விக்கு விடைகாண முயன்று வருகிறார்கள்

அறுதியிட்டுச் சொல்வதற்கு இன்னமும் நெடுங்காலம் ஆகும் என்றாலும், மனிதனைப் போன்ற உயிரினங்கள் முதல் முதல் தோன்றிய காலம் ஏற்க்குறைய ஒன்றரைக்கோடி ஆண்டுகளுக்கு முன்பாகும் என்று அமெரிக்க ஆராய்ச்சியாளர் இருவர் திண்ணமாக எண்ணுகிறார்கள்.

டாக்டர் எல்வின் எல். சைமன்ஸ், டாக்டர் டேவிட் ஆர். பில்பிம் ஆகிய அவ்விருவரும் யேல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் பழம் படிவமான இரண்டு தொடை எலும்புகளை மிகக் கருத்தாக ஆராய்ந்து இவர்கள் அம்முடிவுக்கு வந்துள்ளனர். அந்த இரண்டு எலும்புகளும் இப்போது பூண்டற்றுப்போன ராமாபித்திக்கஸ் என்ற பழைய உயிரினமாகிய 'பிரைமேடி' னுடையவை என்று அவர்கள் கூறுகிறார்கள்

இந்தப் 'பிரைமெட்' எண்பது வட்சம் முதல் ஒன்றரைக் கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் வாழ்ந்தது. விஞ்ஞானிகளுக்கு ஏற்கெனவே தெரிந்ததுதான். ஆனால் அது உருவத்தோற்றத்தில் அதிகமாக மனிதனைப் போல் இருந்ததா அல்லது வாலில்லாக் குரங்கைப்போல் இருந்ததா என்று அவர்கள் சரியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை.

''ராமாபித்திக்கஸ் ஒரு ஹோமினிட்'' என்கிறார் டாக்டர் சைமன்ஸ். உடல் அமைப்பில் மனிதனைப் போன்ற மிகத் தொன்மையான உயிரினம் இதுவே என்று அவர் கூறுகிறார்.

உண்மையிலேயே ராமாபித்திக்கஸ் ஒருஹோமின்ட் என்றால் அதிலிருந்தே நேரடியாக ஆஸ்ட்ரலோபித்திக்கஸ் என்ற பிரைமேட் தோன்றியிருக்கக்கூடும். மனிதன் தோன்றியது ஆஸ்ட்ரலோபித் திக்கஸிடமிருந்து தான் என்பர்.

ஆஸ்ட்ரலோபித்திக்கஸ் தோன்றிக் கிட்டத்தட்ட இருபது லட்சம் ஆண்டுகள் இருக்கும் என்று முன்பு நினைத்திருந்தனர். ஆனால் 1969-ல் சிக்காகோ பல்கலைக்கழக விஞ்ஞானி டாக்டர் எவ். கிளார்க்ஹோவல் தலைமையில் கிழக்கு ஆபிரிக்காவில் ஆராய்ச்சி செய்த குழுவினர் கண்டெடுத்த பழம் படிவங்கள் ஆஸ்ட்ரலோபித்திக்களின் காலம் கிட்டத்தட்ட 40 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னதாகும் என்று காட்டின.

மனிதனுக்கு முந்தியவையான இந்த இரண்டு உயிரினங்களுக்கும்இடைப்பட்ட காலம் இவ்வாறு இந்த ஆராய்ச்சியால் குறுகியது. டாக்டர் ஹோவல் குழுவினர் கண்டெடுத்த பழம் படிவங்கள் எதியோப்பியாவில் ருடால்ப் ஏரிக்கு வடக்கே ஒரு பழைய ஆற்றின் படுகையில் கிடந்தவை ஆகும்.

டாக்டர் சைமன்ஸ், கூறுகிறார்: ''நாங்கள் கண்டுபிடித்துள்ள இரண்டு எலும்புகளும் குறிக்கும் உயிரினம் 'ஆஸ்ட்ரலோ பித்திக்கஸ்' உயிரினத்தை எத்தனையோ வகைகளில் ஒத்திருக்கிறது: ஆதலால் அது வாலில்லாக் குரங்கினோடு அதிகமாக ஒத்திருக்கமுடியாது.''

டாக்டர் சைமன்ஸ், டாக்டர் பில்பீம் இருவரும் ஆராய்ந்த தொடை எலும்புகள் 1930க்கு முன்னும் பின்னும் இந்தியாவில் தோண்டி எடுக்கப்பட்டவையாகும்.

அவை பூண்டற்றுப்போன ஒருவகை வாலில்லாக் குரங்குகளின் எலும்புகள் என்று இதுவரை தவறாகக் குறிக்கப்பட்டிருந்தன என்று டாக்டர் சைமன்ஸ், டாக்டர் பில்பீம் இருவரும் கூறுகிறார்கள்.

ஓர் உயிரினத்தின் தொடை எலும்பைப் பார்த்தே அதன் உண்ணும் பழக்கத்தையும், பிற நடவடிக்கைகளையும் உருவத்தோற்ற மன்பதையில் விஞ்ஞானிகள் உய்த்துணர்ந்து விடுவர். அதுவும் பற்கள் இவ்வகையில் மிகவும் உதவியாக உள்ளன.

வாலில்லாக் குரங்குகள் எல்லாவற்றுக்கும் பெரிய கோரைப்பற்கள் உண்டு. ஆனால் யேல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்த தொடை எலும்புகளில் அவ்வாறு இல்லை. ஆகவே ராமபித்திக்கஸ் பக்கவாட்டில் வாயசைக்க முடியும் இது 'ஹோமினிடுகள்' எல்லாவற்றுக்கும் உரிய செயலாகும். வாலில்லாக் குரங்குகள் பெரும்பாலும் தொடைகளை மேலும் கீழும் அசைத்து உணவை அரைக்கும். ஏனெனில் அவற்றின் கோரைப் பற்கள் வாயைப் பக்கவாட்டில் அசையவிடமாட்டா.

வாலில்லாக் குரங்களுக்கு பின் கடைவாய்ப் பற்கள் இரண்டும் ஏறத்தாழ ஒரே சமயத்தில் முளைத்திருக்கும். மனிதனுக்கோ அப்படி இல்லை. டாக்டர் சைமன்ஸ், டாக்டர் பில்பீம் இருவரும் ஆராய்ந்த ராமாபித்திக்கஸ் தொடைஎலும்புகளில் முன் கடைவாய்ப் பல்லைவிடப் பின் கடைவாய்ப்பல் குறைவாகத் தேய்ந்திருந்தது. இது மனிதனுக்குள்ள பல் அமைப்பை ஒத்திருக்கிறது.

(அமெரிக்கச் செய்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org